# பதினாறும் பெறுக

(நாடகம்)

ஆசிரியர் :

சலகை ப. கண்ணன்

தமிழ்நாடு அரசு வெளியீடு

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. சு. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

# நாடகம் — பதினாறும் பெறுக

## ஆசிரியர் : சலகை ப. கண்ணன்

பாத்திரங்கள்

1. இளங்கோ .. .. பட்டப்படிப்பு மாணவன்
2. பரமசிவம் .. .. மிராசுதார், அஞ்சுபவர்
3. முத்தன் .. .. பரமசிவத்தின் பணியாள்
4. செல்வரங்கம் .. .. பெரும்செல்வர், தீயவர்
5. தாழம்பூ .. .. ஒழுக்கமுள்ள கலைமடந்தை
6. கமலவேணி .. .. பாடகி, இலட்சிய மங்கை

மற்றும்

கல்லூரித் தலைவர், மாலதி, சிறுவன் சுந்தரம்



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**

387/5—1

## காட்சி 1

**இடம்** : கமலவேணி வீடு

**காலம்** : முற்பகல்

(பாடகி கமலவேணி பாடுகிருள். மகள் தாழம்பூ அதற்கேற்ப அபிநயம் பிடித்து பரதநாட்டியம் ஆடுகிருள். மாணவன் இளங்கோ வருகிருன். நின்று பார்த்து ரசிக்கிருன்).

குறள்நெறி இசையமுது :

பாடல் "அறிவுடைமை"

**இராகம்** : காபி **தாளம்** : ரூபகம்

எடுப்பு

அறிவுடைமையே எல்லாம் உடைமை
பிறிதுடைமையில் பெருமை ஏதய்யா? நல்ல (அறி)

தொடுப்பு

செறிவுடைமையாய்த் தெளிவும் அறிவும்
சேர்ந்தவரைப்பகை தான் வெல்லுமோ ?
நெறியுடைய ஞானியர் நட்பிணைப் பெறுதல்
நேர்மையிலே நம்மறிவை
கூர்மையொடு வைப்பதுவாம் (அறி)

படுப்பு

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினுமப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவே

முடிப்பு

தப்பேதுமில்லாத தன் மான நெறியில்
தாழ்ந்தவர் அறிவிலரேயல்லரோ ?
எப்போதும் உலகத்தோடொன்றிய வாழ்வில்
ஏற்றமதை பெற்றிடுவார்
போற்றியநூல் கற்றவரே (அறி)

சந்தம்

தன் மனம் போனவிடந்தனில்
சென்றுவிடாமலே கடிந்து
நன்னெறியாதெனக் கண்டதில்
துன்பமில்லாதவை தொடர்ந்து
செல்லுவரே — அறிவில்
வல்லவரே — தமிழில்
கண்ணனிசை பாடுவதால்
எண்ணமுயர் வாகிடும் மெய் (அறி)

**இளங்கோ :** (மகிழ்ந்து கைகொட்டி) பலே! பலே! பாட்டு மிகப் பிரமாதம்! நாட்டியம் அதைவிடப் பிரமாதம்!

**கமலவேணி :** (வியந்து) அடடே! வா தம்பி இளங்கோ! இந்த குறல்நெறிப் பாடலும், ஆடலும் உண்மையாகவே உனக்குப் பிடிக்கிறதா? உபச்சாரத்திற்குப் புகழ்கிருயா?

**இளங் :** இதென்னம்மா! இப்படிக் கேட்டுவிட்டீர்கள்? மனதிலொன்று வாக்கிலொன்று வைப்பவன் நானல்லவே!

**கமல :** நீயொரு கல்லூரி மாணவன் தானே?

**இளங் :** ஆமாம் அதனுல்?

**கமல :** ட்விஸ்டு, பால்ரூம் டான்ஸ், ராக்அண்ட்ரோல் நாட்டியங்களை ரசிப்ப தல்லவோ கல்லூரி மாணவனுக்கழகு?

**இளங் :** ஆமாம்! இல்லே, இல்லே, எனது நண்பர்கள்தான் அப்படி நான் இல்லே. எனக்குப் பண்புள்ள தமிழிசையும், பரதநாட்டியமும் மிகவும் பிடிக்கும்.

**கமல :** நிரம்ப மகிழ்ச்சி! புளிக்கும் பழக்கடையில் ஒரு இனிப்பான மாம்பழமும் இருக்கிறது.

**தாழம்பூ :** அம்மா, அம்மா.

**கமல :** என்னடி தாழம்பூ?

**தாழம்பூ :** இந்த மாம்பழம் முழுவதும் இனிப்பென்று நீங்கள் நம்பி விடாதீர்கள்! இந்த இனிப்புப் பழத்தின் மேல் பழமை என்ற கசப்பான தோல் மூடியிருக்கிறது. கலைகளிலே புதிய கருத்துக்களை இணைக்கக்கூடாது என்பவர் இவர்.

**கமல :** அப்படியா இளங்கோ? புதிய கருத்துக்களை வெறுக்கிருயா நீ.

**இளங் :** நல்ல புதிய கருத்துக்களை நான் வெறுக்கவில்லை என்ருலும் அவற்றை நுழைத்து கலைகளை மாசு படுத்துவது பிடிப்ப தில்லை. கலை கலைக்காகத்தானே வளரவேண்டும்.

**கமல :** நீ கருத்தில்லாத கலையை விரும்புகிருய். நல்லது ; இராமாயண காவியம் எதற்காக உண்டாயிற்று?

**இளங் :** (யோசித்து) நீதியை உணர்த்திட

**கமல :** தியாகராஜர் இசைப்பாடல்களை எதற்காக இயற்றினுர்.

**இளங் ;** பக்தியை வளர்த்திட,

**கமல :** முன்னேர்கள் அரிச்சந்திர நாடகத்தை என் எழுதினுர்கள்?

**இளங்** சத்தியம் காத்திட.

**கமல :** நீதியை உணர்த்தல், பக்தியை வளர்த்தல், சத்தியம் காத்தல் போன்ற கருத்துக்களைக் கலைகளில் புகுத்தியது குற்ற மல்லவா. கருத்தற்ற கலையல்லவோ வளரவேண்டும்? இதுவரை அப்படி வளர்ந்திருக்கிறதா? வளர்க்க முடிந்தால் இனியும் வளர்க்க முடியுமா? யோசித்துப் பார் இளங்கோ

இளங் : (யோசித்து) ஆம். இது ஒரு சிக்கலான சங்கதிதான். ஆனால்.... எங்கள் பேராசிரியர் கலை கலைக்காகவே என்பதைப் பொருத்தமாகச் சொன்னாரே!

கமல : அப்படிச் சொன்ன உங்கள் பேராசிரியர் சைவராக இருந்திருந்தால்' சிவ நெறிக்கலைகளை நுகரச் சொல்லியிருப்பார். வைணவராக இருந்திருந்தால், வடகலைகளை சுவைக்கச் சொல்லியிருப்பார். சமயச் சார்பற்றபொது நெறியாளராக இருந்திருந்தால், திருக் குறளின் வாழ்வுக் கலையைச் சுவைக்கச் சொல்லியிருப்பார். இல்லையா? நினைத்துப் பாருங்கள்.

இளங் : (எதையோ உணர்ந்தவன் போல் வாய்மடக்கி, கை சொடுக்கி) அடிச்சக்கை. இப்பத்தான் அதோட ரகசியம் புரியுது. கலை கலைக்காகன்னு சொன்ன எங்கள் வைணவப் பேராசிரியர் திருக்குறளின் வாழ்வுக்கலையைப் பரிகசித்தாரே. பக்திக் கலையே முக்கியம். அது பக்த விஜயத்தில் கிடைக்கும் என்றல்லவா சொன்னார்.

கமல : இப்பொழுதாவது புரிந்ததே. இளங்கோ! இதற்குத்தான் திரு வள்ளுவர் அப்பொழுதே சொன்னார். "எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்று.

இளங் : இது தமிழில் தானே?

கமல : ஆம்: ஆங்கிலத்தில் ஷெல்லியைப் படிக்கலாம். ஷேக்ஸ்பியரைப் படிக்கலாம், சாக்ரட்டீசைப் படிக்கலாம், அரிஸ்ட்டாட்டிலைப் படிக்கலாம்! ஆனால் தமிழில் வள்ளுவனைப் படிக்காது விட்டால் நாம் எடுப்பார் கைக்குழந்தையாகி விடுவோம். நமது பண்பை, பகுத்தறிவை, அன்பை, அறநெறியை நாமறிந்து கொள்ளமுடியாது. இலட்சிய வாழ்வை நாம் பெறவும் முடியாது. கொஞ்சம் பொறு இதோ வந்தேன்.

(அவசரமாக உள்ளே செல்கிறாள் கமலவேணி)

இளங் : மை டார்லிங் தாழம்பூ. பெரிய விவாதத்தில் என்னை மாட்டி விட்டாயே உன் தாயார் கமலவேணியம்மாளின் அறிவாற்றல் அடேயப்பா! விவாதம் பேசிக்கெலிக்க முடியாது போலிருக் கிறதே.

தாழம்பூ : வாய்ப்பேச்சில் மட்டுமல்ல, நடைமுறையிலும் ஒழுக்கம், நீதி நேர்மைகளில் பிடிவாதமுள்ளவர்கள்.

இளங் : ஐயயோ. அப்படியானால் நான் உன்னிடம் பழகுவதையே குற்ற மாகக் கருதுவார்களோ? (அவள் கைபற்றி) தாழம்பூ!

தாழம்பூ : இளங்கோ! பயப்படாதீர்கள்! பழகுவதைக் குற்றமாகக் கருத மாட்டார்கள். இதுபோல பழகும் குற்றத்தை லேசில் விடவும் மாட்டார்கள்.

இளங் : (வெடுக்கென்று விட்டு) ஒரு காதலனும், காதலியும் பழகுவதில் குற்றமுள்ளது எது, குற்றமற்றது எதுவென்பது எனக்கு விளங்கவில்லையே.

(கையில் திருக்குறளை விரித்துப் படித்தவண்ணம் வருகிறாள் கமலவேணி)

"அருமையுடைத்தென்று அசாவாமை வேண்டும் பெருமை முயற்சி தரும்"

இளங் : இது திருக்குறள்தானே அம்மா?

கமல : ஆமாம் இளங்கோ.

இளங் : இதன் பொருள்?

கமல : தமது பலவீனத்தை நினைத்து இது நம்மால் முடியக்கூடிய காரியமல்லவே என்று தளர்ந்து விடக்கூடாது. அதனைச் செய்து முடிக்கும் பெருமையினை முயற்சியானது தரும். எதற்கும் தளராத முயற்சி தேவையென்கிறார் திருவள்ளுவர். இவை போன்ற அறிவுரைகள் நிறைந்த இக்குறளமுது உன் வாழ்வுக்கு வளம் சேர்க்கட்டும். இந்தா

(கொடுக்கிறாள், அன்போடு பெற்றுக்கொள்கிறான்)

இளங் : (பிரித்துப் படிக்கிறான்) அருமையுடைத்தென்று அசாவாமை வேண்டும். பெருமை முயற்சி தரும். பெருமை முயற்சி தரும். நான் வருகிறேன். வணக்கம். பெருமை முயற்சி தரும். பெருமை முயற்சி தரும்.

(படித்துக்கொண்டே போகிறான் இளங்கோ

## காட்சி 2

இடம் : பரமசிவம் வீடு

காலம் : பிற்பகல்

(செய்தித்தாள் படித்தவண்ணம் நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார் மிராசுதார் பரமசிவம்).

பரமசிவம் : (படித்தல்) "சந்திரனில் மனிதன் இன்னும் பத்தாண்டுகளில் குடியேறலாம். நிலவியல் ஆராய்ச்சி வேகமாக நடைபெறுகிறது. மனித சக்தி விஞ்ஞானத்தின் துணை கொண்டு இயற்கையை வெல்லுகின்ற காலம் வெகு தூரத்தில் இல்லை". கிழித்து விட்டார்கள் வெட்டிப்பயல்கள்.

(அப்பொழுது வருகிறான் முத்தன் கையிலே கீரைக்கத்தைகளோடு)

முத்தன் : ஆமாங்க எசமான்! அதெப்படிங்க எங்களுக்குத் தெரியுமங்க கிழிச்சது?

பரம : எதையடா கேக்கறே?

முத்தன் : அது தாங்க, தண்ணி எறைக்க பம்பு செட்டுதான் வேணும் தோலுப்பறி வேணுமுண்ணு, நம்ப தோப்புக்காரணுங்க பறிகளைக் கிழிச்சுப் போட்டானுங்களே!

பரம : (வியந்து) அட! தோலுப்பறிகளைக் கிழிச்சுப் போட்டானுங்களா ஏண்டா என்ன கொழுப்படா அவன்களுக்கு?

முத்தன் : ஆமா....நீங்க.. கிழித்து விட்டான்கள், வெட்டிப்பசெங்கண்ணு சொன்னீங்களே, எதை?

பரம : முத்தா! பேப்பர்லே போட்டிருக்கிறான். சந்திரன்லே மனிதன் இன்னும் பத்தாண்டுகுள்ளே குடியேறலாமாம். மனித சக்தி இயற்கையை கெலிச்சுப் போடுமாம். செஞ்சுப் போடுவானுங்களான்னு என்னோட மனம் கேட்டுது, கேட்டேண்டா.

**முத்தன்** : சந்திர மண்டலத்துக்கு ஏன் போறீங்க? மனித சக்தி இயற்கையை ஜெலிக்கிற சங்கதிதானே இங்கேயும் நடக்குது. இந்தக் கீரையைப் பாருங்க, எப்படித் தளதளன்னு இருக்குது? முன்னெயெல்லாம் இயற்கையா மொளைக்கிறதைத்தான் கீரேன்னு லேசாச் சொல்லுவோம். இப்ப நம்பத் தோட்டத் திலேயே பாத்திகட்டி வெதைச்சல்ல பயிர் பண்ணறோம்.

**பரம** : டேய் முத்தா! இந்தக் கிள்ளுக்கீரை சங்கதியைப் போயி இவ்வளவு பெரிசாச் சொல்றீயேடா!

**முத்தன்** : விட்டுடுங்க! இது வேணும். இயற்கையா கெடக்கிறது தண்ணி. செயற்கையாக் கெணறு வெட்டித்தான் வெள்ளாமை பண்ணினோம். தண்ணி எறைக்க ஏத்தம் வச்சோம். மாடுகளைப்பூட்டி எறைச்சோம். இப்ப அதனாலே முடியாமெ பம்பு செட்டு வைக்கிறோம்.

**பரம** : யாரு? நம்பளா? டேய் முத்தா! பம்பு செட்டு, மோட்டாரு வைக்கிற கதையெல்லாம் எங்கிட்டே நடக்காதுடா! நான் எங்கத் தாத்தா மாதிரியே விவசாயம் பண்றவன். அவரோட வழியிலேருந்து எள்ளுப் பிரமாணம் தவறமாட்டேன். ஆமாம்.

**முத்தன்** : நீங்க தவற மாட்டீங்க எசமான்! காலம் தவறிப்போச்சுங்களே. பறியிலே எரைச்சா தண்ணி பத்தலே. பம்பு செட்டு வச்சாத் தான் வெள்ளாமை நடக்கும். இல்லேன்னா எம்பது எக்கரா நஞ்செயும் கொறையாத்தான் கெடக்குமுங்க. எமேலே கோவிச்சுக்காதீங்க. இந்த சங்கதி கிள்ளுக் கீரையல்ல.

**பரம** : (பதறி) ஆங்! முத்தா! நெசமாவா சொல்றே?

**முத்த** : நெசந்தானுங்க. பம்புசெட்டு வைக்கலேன்னா இனிமே நானுங்கூட பண்ணையம் பார்க்கப் போகமாட்டேனுங்க !

**பரம** : முத்தா ! நீ என்னோட வேலைக்காரன். என்னோட கொள்கைக்கு நீயா விரோதியா மார்றது ?

(அப்போது இளங்கோ வருதல்)

**இளங்** : அப்பா ! உங்கள் கொள்கைக்கு விரோதமாக என்ன செய்தா னப்பா முத்தன் ?

**பரம** : இளங்கோ ! அநியாயத்தைக் கேளடா, நம்ப தோட்டத்திலே பம்பு செட்டு வச்சு விவசாயம் பண்ணனும்னு சொல்றாண்டா? இது அடுக்குமா ?

**இளங்கோ** : இந்த தப்பான காரியத்தை மற்றவர்கள் செய்கிறார்களே அப்பா !

**பரம** : அடேய் ! பழக்க வழக்கம், பரம்பரையை மறந்திட்டு மத்தவங்க நடக்கலாம். நம்ப நடக்கலாமா ? இது வரைக்கும் நடந் திருக்கிறோமா ?

**இளங்** : இல்லையப்பா !

**முத்த** : ஏந்தம்பி இப்படிப்பொய் பேசறீங்க ? கல்லூரியிலே இப்ப நீங்க பி. ஏ. வகுப்பிலே படிக்கறீங்க. ஒங்க தாத்தா இப்படி படிச்சாங்களா ? உங்கப்பாதான் படிச்சாங்களா ?

பரம : (சினந்து) டேய் ! அயோக்கியப்பயலே ! பரிகாசமா பண்றே ? என்னைத்தாம் படிக்கிறவன்னு நெனச்சுகிட்டே ? மணடையைப் பொளந்து, பொளந்து போடுவேன் பாத்துக்கோ !

இளங் : பொறுங்களப்பா ! முத்தனின் கேள்வி வரம்பு கடந்ததாக இருக்கலாம். ஆனல் அதிலுள்ள உண்மையை நம்மால் மறுக்க முடியாதே !

பரம . இளங்கோ ! நீ என்னடா சொல்றே !

இளங் : இரும்புப்பிடி வைதீகமாக இருந்தாலும், காலமாற்றத்தைத் துரும்பாக ஒதுக்க முடியாதப்பா ! தயவு செய்து விவசாயத்திற்கு பம்புசெட்டு வைத்து விடுங்கள். நான் கல்லூரிப் படிப்பை முடித்துக்கொண்டு விவசாயம் செய்யும்பொழுது யந்திரக் கலப்பையால் உழுது விதைத்து, யந்திரத்தின் மூலமாகவே ஏராளமாக அறுவடை செய்வேன். நாட்டின் உணவு நெருக்கடியைத் தீர்க்க உதவுவேன்.

பரம : டாய், முத்தா !

முத்தன் : எசமான்

பரம : தம்பி சொல்றதைக் கேட்டியா ? இளங்கோவோட பேச்சிலே எப்பவும் ஒரு உண்மை நியாயம் இருக்கத்தான் செய்யும் தம்பியோட இஷ்டம் போலவே செஞ்சுப் போடுவோம்.

முத்தன் : ஆமாங்க ! அதைத்தானே நானும் எதிர்பார்க்கிறேன்.

இளங் : அப்பா ! எங்கள் கல்லூரியின் கலைப்பணியில் நான் அதிகமாகப் பங்கு பெற்று வருகிறேன். இசை, நடிப்பு ஆகியவற்றில் எனக்கு நல்ல திறமை இருப்பதாக எங்கள் கல்லூரித் தலைவர் சொல்லுகிறாரப்பா !

பரம : அப்படியா ! சந்தோஷம் தம்பி ! நாங்கூட சிறு வயசிலே நாடகத்திலே பாட்டுப்பாடி நடிச்சிருக்கிறேண்டா.

இளங் : அப்படியா ? என்ன வேஷம் போட்டீர்களப்பா ?

பரம : சந்திரமதி வேஷம். அந்தக்காலத்திலே வேலுநாயர் அரிச்சந்திரனாகவும், அனந்தநாராயணன் சந்திரமதியாகவும் வேஷம் போட்டு நடிப்பாங்க பாரு. (யோசித்து) ச்சு..ச்சு சுடலையிலே லோகிதாசனை எரிக்க வந்த சந்திரமதியைப் பார்த்து, அரிச்சந்திரன் வாய்க்கரிசியும், முழத்துண்டும் வேணும்னு கேட்டான். பாவம் கொடுக்க முடியலே, சந்திரமதியாலே. காசு இல்லேன்னு ஒங்க மூகத்திலே தாலி இருக்குதென்னான். அப்ப சந்திரமதி அழுது புலம்பினா பாரு. (பாடுகிறார்) ஐயயோ....

முத்த : எசமான் ! கொஞ்சம் நில்லுங்க. நீங்க நல்லாத்தாம் பாடுவீங்க! இப்ப வேணும் அந்தக் கட்டம். அப்புறம் வச்சுக்கலாம். மொதல்ல சந்தோஷமா விவசாயத்துக்குப் பம்பு செட்டு வாங்கப் பொறப்படுங்க.

பரம : முத்தா ! கவலைக்காரன்னு நீ தாண்டா வேலைக்காரன்.

(தட்டிக் கொடுக்கிறார்)

## காட்சி 3

இடம்: கமலவேணி வீடு

காலம்: மாலை

(கமலவேணி குறள்நெறி இசைப்பாடல் பாடிட, தாழம்பூ ஆடுகிருள்)

பாடல்: "ஒழுக்கமுடைமை"

இராகம்: நாட்டைக்குறிஞ்சி தாளம்: ஆதி

எடுப்பு

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்
என்றும் இடும்பை தரும் தீயொழுக்கம்"

——வழக்கம் (நன்)

தொடுப்பு

வென்றியுடன் ஒழுக்கம் காப்பவன் மேலோன்
வேதியன் ஆயினும் கெடுப்பவன் தீயோன் (நன்)

படிப்பு

உலகத்தோடொட்ட ஒழுகல் கல்லார்
பல கற்றும் அறிவலார் கருதிடுவாய்

முடிப்பு

நலமிகவே பெறுவார் நற்புகழால் உயர்வார்
இலம் எனும் நிலையினும் இழி செயல் புரியாதார் (நன்)

சந்தம்

ஒழுக்கத்தில் வருவது மேன்மை—புலன்
விருப்பத்தில் நிகழ்வது தாழ்மை—நலன்
ஒழுக்கமுடையகுடி உயர்வினையுறுமதில்
இழுக்கமுடையதெனில் இழி பிறப்பாகும்
பகுத்தறிவுக் கண்ணன் குறள் நெறிப்பனுவலில்
வகுத்திடும் கருத்தினில்
திளைத்திடு அனுதினம் (நன்)

(கிராமியப் பிரபு செல்வரங்கம் வருகிருர் கையில் குடையுடன்)

செல்வ: பேஷ்! பேஷ்! பிரமாதம்! பிரமாதம்!

கமல: ஐயா! வாருங்கள். உட்காருங்கள். நீங்கள் யாருங்க?

செல்வ: நான்தான் சேலம் பிரபு செல்வரங்கம், தெரியாதா உங்களுக்கு?

கமல: தெரியாதே! வந்த செய்தி என்னவோ?

செல்வ: எங்களோட கிராமம் எலமன்பட்டியிலே மாரியம்மன் பண்டிகை போட்டிருக்காங்க. அதுக்கு ஒரு இசைத்தட்டு நடனம் ஏற்பாடு பண்ணணுமாம். எங்கவூர்க்காரனுங்க தாழம்பூ வேணும் தாழம்பூ வேணும்னு ஒத்தைக் காலிலே நிக்கிறுங்க.

கமல: ஐயோ பாவம்! கொக்குகள் மீனுக்காக நிற்பதைப் பார்த்திருப் பார்கள்!

செல்வ : அவுங்க எண்டா அப்படி நிக்கிருங்க அப்படீங்கறது, இங்கே வந்து தாழம்பூ வோட ஆட்டத்தையும் பாட்டத்தையும், தளுக்கையும் மினுக்கையும் பார்த்தப்புறமல்ல எனக்குத் தெரியுது ! எம்மா ! நீங்க தாழம்பூவோட தாயாருதானுங்களே ?

கமல : ஆமாங்க.

செல்வ : ரேட்டு ஒங்ககிட்டேயே பேசிக்கலாமா ?

கமல : ஐயா ! ரேட்டுப் பேசுவது இருக்கட்டும். நீங்கள் எங்கேயோ போகிறவர் வழி தவறி இங்கே வந்திருக்கிறீர்கள். முதலில் தயவு செய்து எழுந்திருங்கள்.

செல்வ : எம்மா ! கேக்கற பணம் நான் கொடுப்பேனு மாட்டேனுங்கிற சந்தேகமா ? நான் யாருங்கறது ஒங்களுக்குப் புரியலேன்னு நெனேக்கிறேன்.

தாழம்பூ : சந்தினத்திற்கும் சகதிக்கும் வித்தியாசம் தெரியாதவர் என்பது நன்ருக புரிகிறது. புரிந்திருந்தால் இசைத்தட்டு நடனத்திற்கு என்னை வந்து அழைத்திருப்பீரா ?

செல்வ : என் ? நீ அந்த ஆட்டத்தை ஆடக்கூடாதா ? கைநிறைய பணம் கொடுக்கறேன். கூட்டத்திலே மாலே மாரியாதை செய்யறேன்.

கமல : அப்புறம் இரவு உம்முடைய மாளிகையில் தங்க வைப்பீர் விருந்து நடத்துவீர். துணிமணிப் பரிசு கொடுப்பீர். படுக்கப் பிடிக்க வசதிகள் செய்வீர் ! இல்லேயா ?

செல்வ : அடடா ! என்னேட தகுதியும், நிலேயும் உனக்குத் தெரிஞ்சித்தான் இருக்குது ! என்னேட எண்ணத்தை அப்படியே சொல்லிப்போட்டியேம்மா !

கமல : ஐயா, பிரவுவே ! நன்ருகத் தெரிந்துதான் நான் சொன்னேன். இடந்தெரியாமல் வந்து வீட்டீரென்று. காசும், காமக்களியாடலும், உமக்குப் பெருமை தரலாம். தெய்வத்திற்கும், திருவிழாவுக்கும் பெருமைதராது. அந்த நடனக் கலே வியாபாரம் எங்களிடமில்லே. நீர் போய் வரலாம்.

செல்வ ' போயிட்டு மறுபடியும் வரவா ?

கமல : வேண்டாம் ! வேண்டாம் ! போனல் போதும் ! திரும்பிவரவே வேண்டாம்.

செல்வ : (சினந்து) ஆ.·.கா ! பெட்டைச் சிறுக்கிகளே ! என்ன திமிர் ஒங்களுக்கு ? என்னேட சங்கதி தெரியாமே, வாயை வித்துப் போட்டீங்க. ஆகட்டும் பார்த்துக்கிறேன்.

(திரும்பி வேகமாக வெளியேறுகிருர்)

தாழம்பூ : தெய்வமே ! இதுபோன்ற ரசிக மணிகளிடமிருந்து கலேஞர்களே நீதான் காப்பாற்றவேண்டும்.

(சொல்லிவிட்டு மேசை மேலிருந்த ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு கிளம்புகிருள் தாழம்பூ)

கமல : தாழம்பூ ! என்ன புத்தகம் அது ?

தாழம்பூ : (அஞ்சி) இது......வந்தும்மா ....இந்தப் புத்தகம்....நான் வாங்கலே......என்னுடையதல்ல.

கமல : என்ன புத்தகம் என்றுதானே கேட்டேன். ஏன் குளறுகிறுய் ? கொண்டா அதை.

தாழம்பூ : (பயந்து) அம்மா ! இது என்னுடையதல்லம்மா.

(கொடுக்கிருள் அச்சத்தோடு கமலவேணி வாங்கிப் பார்க்கிருள்)

கமல : "பயங்கரக் காதல்" இது புத்தகத்தின் பெயர். கவர்ச்சிப்படம் அட்டையில் தாழம்பூ : இதுபோன்ற "செக்ஸ்" புத்தகத்தைப் படிப்பதே தவறு. அதைவிடத் தவறு மங்கையொருத்தி ஒரு இளைஞனிடமிருந்து பெற்றுப்படிப்பது !

தாழம்பூ : (அழாக்குறையாக) அம்மா !........என்னை மன்னித்து விடுங்களம்மா !

கமல : இதை இளங்கோவே கொடுத்தாஞ ? நீ கேட்டாயா ?

தாழம்பூ : கொடுத்—கேட்——இல்லே—இல்லே.

கமல : ஆகமொத்தம் இருவரும் குற்றவாளிகள். தாழம்பூ ! என் குணம் தெரியுவல்லவா உனக்கு ?

தாழம்பூ : தெரியும் அம்மா! புத்தகத்தை வாங்கியது தவிர வேறு எக் குற்றமும் நான் செய்யவில்லேயம்மா. என்னை நம்புங்கள் இந்தப் பிழையை மன்னித்து விடுங்கள். இனி இதுபோல் நடந்துகொள்ளவே மாட்டேன்.

(காலில் விழுகிருள்)

கமல : (தூக்கிவிட்டு) சரி, இனிமேல் புத்திசாலித்தனமாக நடந்துகொள்.

(போகிருள் கமலவேணி).

## காட்சி 4

இடம் : பூங்கா காலம் : மாலே

(இளங்கோவும், தாழம்பூவும் கையில் புத்தகத்துடனிருக்கின்றனர்)

இளங்கோ : தாழம்பூ! நாம் ஒருவரையொருவர் அறிந்து நடப்பதுபோல், நாம் ஒருவரையொருவர் மதித்தும் நடந்து கொள்ள வேண்டும்.

தாழம்பூ : இளங்கோ! தங்களே மதிக்காமல் நான் எப்பொழுதாவது, எதையாவது செய்ததுண்டா?

இளங் : இப்பொழுது செய்கிருயே!

தாழம் : என்ன செய்கிறேன்?

இளங் : வரப்போகும் கல்லூரி ஆண்டு விழாவில் இசை நாடகம் ஒன்று நடத்துவோம் என்று சொன்ஞல், காதிலேயே வாங்க மறுக்கிருயே!

தாழம் : ஓ! அதைச் சொல்லுகிறீர்களா? உங்களே மதிக்கிறேன், கருத்தை மதிக்கிறேன், காரியத்தை மதிக்கிறேன். உங்களோடு சேர்ந்து நடிக்கவும் துடிக்கிறேன், நான்!

இளங் : பிறகேன் மௌனம் சாதிக்கிருய்?

தாழம் : சொல்ல வேண்டியவர்களிடம் சொன்ஞலல்லவோ நடக்க வேண்டியது நடக்கும்.

**இளங் :** ஓ! மன்னிக்க வேண்டும் தாழம்பூ! உன் அம்மாவை நான் மறந்தே விட்டேன்.

**தாழம் :** அந்தத் தவறென்றை நானும் செய்துவிட்டேன் இளங்கோ.

**இளங் :** என்ன தவறு?

**தாழம் :** உங்களது பயங்கரக் காதலை அம்மாவுக்குத் தெரியாமல் நான் பெற்றுக் கொண்டேனே!

**இளங் :** பயங்கரக் காதலையா! தாழம்பூ! நம்முடைய காதல் முல்லை மலர் போல் மென்மையானது. கொம்புத் தேன் போல் இனிமை யானதாயிற்றே! இதையேன் பயங்கரமாக்குகிருய்?

**தாழம் :** இதை என்னை வந்து கேட்கிறீர்களே! இந்தப் புத்தகத்தை எழுதிய ஆசிரியரையல்லவா கேடகவேண்டும்.

(புத்தகத்தைக் கொடுக்கிருள்)

(பெற்றுக்கொண்டு பார்க்கிருன்)

**இளங் :** ஓ! "செக்ஸ்" புத்தகம்! பயங்கரக் காதல். இதை அம்மா பார்த்து விட்டார்களா?

**தாழம் :** நான் மறைக்க முயன்றேன். முடியவில்லை. என் கண் கலங்கு மாறு கடிந்து பேசினுர்கள். இதை நான் உங்களிடம் வாங்கியது தவறு தானே?

**இளங் :** கொடுத்தது என் தவறு, தாழம்பூ! என்றுலும் நாம் காதலிப்பது தவறல்லவே?

**தாழம்** என் இந்தச் சந்தேகம்?

**இளங் :** கண்ணும் கருத்துமாக நாம் சட்டி வளர்க்கும் தூய்மையான காதலை மறைத்து, மறைத்து, இன்னும் எவ்வளவு காலம் சிறைப் படுத்திவைப்பது தாழம்பூ?

**தாழம் :** எத்தனை காலம் வைத்திருந்தாலும் கெட்டுப் போகாத பண்ட மல்லவோ இது?

**இளங் :** பசித்தவன் முன்பு பால் சோறு, எடுத்துப் புசிக்காமல் எப்படிப் பொறுத்துக் கொண்டிருப்பது?

(அவள் கையைப் பற்றுகிருன்)

**தாழம் :** அம்மாவின் மகள் நான். ஆளனின் மனைவியாகும்வரை பொறுத்து இருக்கத்தான் வேண்டும்.

(எதிர்பாராது கூடையுடன் வருகிருன் பணியாள் முத்தன்)

**முத்தன் :** பொறுமை! எதுக்கும் பொறுமை வேணும். பொறுத்தவர் பூமியாள்வாருன்னு சொல்லுவாங்க. ஆட்சி நடத்தறவங் களுக்கு மட்டுமா அது காதல் நடத்துறவங்களுக்கும் அது தேவைங்க தம்பி, தேவை.

(இருவரும் திடுக்கிட்டு விலகுகின்றனர்)

**தாழம் :** இளங்கோ! நான் வருகிறேன். (போகிருள்)

**இளங் :** முத்தா! எங்கே இந்தப் பக்கம்? எதற்குக் கூடையோடு கிளம்பி விட்டாய்?

**முத்தன் :** இது வெறும் ஒதட்டுக் கேள்வி தம்பி. இந்த சமயத்திலே இங்கே ஏண்டா வந்தேன்னு கேளுங்க. அது உள்ளத்துக் கேள்வி.

இளங் முத்தா! எனக்கு உள்ளமும், உதடும் ஒன்றுதான். 'எளிதல் உணர்ச்சி வயப்படும் கல்லூரி மாணவன் என்றாலும், உண்மைக்குப் புறம்பாக, ஒழுக்கத்திற்கு மாருக நடக்க மாட்டேன் என்பது உனக்குத் தெரியுமல்லவா?

முத்தன் : ஓ! அது தெரியுந்தம்பி.

இளங் : அப்படியானுல் நீ கண்ணுல் பார்த்ததை நெஞ்சோடு வைத்துக்கொள் உதட்டால் உதிர்த்துவிடாதே!

முத்தன் : ஆகட்டும் தம்பி. கொஞ்ச நாளேக்கா? எப்பொழுதுமா?

இளங் : கொஞ்ச நாள். காலம் கனியும் வரை.

முத்தன் : ஆகட்டுந்தம்பி. கூடைவேலே கெடக்குது. நான் வர்றேன்.

(போகிருன்)

இளங் : (பெருமூச்சுவிட்டு) அப்பா! நான் தப்பினேன்!

(வேறு பக்கம் போகிருன்)

## காட்சி 5

இடம் : பரமசிவம் வீடு காலம் : மாலே

(பரமசிவம் "பயங்கரக் காதல்" புத்தகம் படித்துக்கொண்டிருக்கிருர். பணியாள் முத்தன் கூடையோடு வந்து பார்க்கிருன்)

முத்தன் : என்னங்க எசமான் புத்தகம்?

பரம : எதுக்கடா கேக்கறே? நீ படிக்கப் போறீயா?

முத்தன் : எனக்கேதுங்க படிப்பு அட்டையிலே என்னமோ நிருவாண படம் இருந்ததேன்று பார்த்தேன்.

பரம : இதை எல்லாம் நீ பார்த்தா மனசு கெட்டுப் போயிடும்டா. போய் ஒன்னுேட வேலேயைப் பாரு.

முத்தன் : ஆமாம்! நான் பார்க்கக்கூடாது. நெசந்தான் எசமான். நீங்க பாத்து உங்க மனசு கெட்டுப்போயி அதனுலே உங்களுக்கு ஏதாச்சும் ஆனு, செய்யறதுக்கு நான் இருக்கிறேன். எனக்கு ஏதாச்சும் ஆனு செய்யறது யாருங்க? நீங்க சொல்றது நெசந்தானுங்க!

பரம : முத்தா! வருத்தப்படறியாடா? நான் ஒனக்கு நிரம்ப கஷ்டம் கொடுக்கறேண்டா ஆமா, அதுகளுக்கு சாப்பாட்டுச் சாமா னெல்லாம் வாங்கிக் கொடுத்திட்டியா? அவளுக்குத் தலேவலி காய்ச்சல்னு சொன்னுளே, தேவலாமா?

முத்தன் : அவங்க நல்லாத்தான் இருக்காங்க எசமான். எல்லா சாமானும் வாங்கிக் கொடுத்திட்டேன். ஆமாம், எசமான்! இந்தப் பொத்தகத்தை நான் வேறே ஒருத்தர் கையிலே பார்த் தேனே! இது நீங்களா வாங்கினீங்களா? இல்லே....

பரம : நம்ப தம்பியோட புத்தகடாடா. சும்மா எடுத்துப் பார்த்தேன்.

முத்தன் : அதுதானே கேட்டேன். பாருங்க. பாருங்க. தம்பி யாட்டம் பக்கத்திலே ஒருத்தியை வச்சுகிட்டு வேணுலும் பாருங்க.

பரம : (வியந்து) டே! டே! டே! டே! டே! என்னடா, என்னடா, என்னடா சொன்னே? தம்பியோட பக்கத்திலே ஒருத்தியா? எங்கே? எங்கே? எப்படா பாத்தே?

முத்தன் : (வாயில் விரல் வைத்து) உஸ்! அதை அப்பறம் சொல்றேன். தோ! செல்வரங்கம் வர்ருரு! மொதல்லே அவரைப் பாருங்க.

(செல்வரங்கம் வருகிருர், கையிலே குடையோடு)

பரம : வாங்க ஐயா வாங்க! ஒக்காருங்க....

செல்வ : (சிரித்து) கேட்ட பணம் பத்தாயிரமும் கொண்டாந்திருக்கிறேன்.

பரம : டாய் முத்தா! போய் காபி கொண்டாடா! (போகிருன்) ஒங்களுக்கு நிரம்ப சிரமம் கொடுத்திட்டேன். எனக்குக் கடன் வாங்கி வழக்கமில்லே! தோட்டத்துக் கெணத்துக்கெல்லாம் பம்பு செட்டு வச்சாகணும்னு ஒத்தைக்கால்லே நின்னுப்பொட்டானுங்க. அதனுலே வாங்கவேண்டி வந்துட்டதுங்க! இது வெளியே யாருக்கும் தெரியவேணுமுங்க!

செல்வ : அதனுலென்ன, பாதகமில்லே! கொடுக்கல்வாங்கல் கோடீஸ்வரனுக்கும் உண்டுன்னு சொல்லுவாங்க. இது நமக்குள்தானே யாரிடமும் சொல்லமாட்டேன்.

(நோட்டுக்கத்தைகளை எடுத்துக்கொடுக்கிருர். எழுதிய பாண்டை எடுத்துக் கொடுக்கிருர்.)

செல்வ : இதிலே ஒரு சின்ன கையெழுத்துப் போட்டுக் குடுத்திடுங்க. தம்பி இளங்கோ எங்கே போயிட்டுது?

பரம : காலேசுக்குப் போயிருக்கான். ஏனங்க?

செல்வ : தம்பியோட பேரையும் கணக்கப்புள்ளே பாண்டிலே எழுதிபிட்டான் தம்பியோட கையெழுத்தும் (பரமசிவம் கையொப்பமிடுகிருர்)

பரம : ஐயா! நானே இதுவரை பாண்டு எழுதிக் கொடுத்துப் பணம் வாங்கினதில்லே. இதிலே போயி இளங்கோவையும் சேர்க்கணுமா?

செல்வ : அதனுலென்ன! பரமசிவம்! கணக்கன் எழுதிப்போட்டான். இது நமக்குள்ளேதானே இருக்கப்போவுது. சும்மா போடச் சொல்லுங்க.

(இளங்கோ வருகிருன்)

செல்வ : தோ! தம்பி வந்துட்டாங்களே! வாங்க தம்பி! வாங்க, வாங்க, நல்ல வேளையிலே வந்தீங்க.

இளங் : வணக்கம் ஐயா! என்ன விசேஷம்?

பரம : ஒண்ணுமில்லே தம்பி! எல்லாம் ஒனக்காகத்தான் பம்புசெட்டு வைக்கறதுக்காசப் பத்தாயிரம் ரூபாய் கடன் வாங்கறேன். பாண்டுல உன்னுேட கையெழுத்தும் வேணும்கிருரு.

இளங் அதற்கென்ன! போடவேண்டியதுதானே? கொடுங்கள்.

(பாண்டை வாங்கிக் கையெழுத்துப்போட்டுக் கொடுக்கிருன் தந்தையிடம்)

**பரம** : (செல்வரங்கத்திடம் அதைக் கொடுத்து) ஆறு மாசத்திலே, சம்பா அறுவடையிலே பணத்தைக் கட்டிப்போடுவேனுங்க.

**செல்வ** : ஒங்க சௌகரியம்போல மெதுவா கொடுங்க. பரமசிவம்! இந்தக் கொடுக்கல் வாங்கல் இருக்கே, விவசாயத்துக்கு வியாபாரத்துக்கு மட்டுமில்லே, நம்மோட குடும்ப வாழ்க்கைக்கும் அவசியமானதுங்கறேன்!

**பரம** : அதெப்படிங்க?

**செல்வ** : நீங்க ஒரு கல்லூரி மாணவரோட தகப்பன், நான் அழகான பெண்களோட தகப்பன். நாம்பரெண்டுபேரும் கொடுக்கல் வாங்கல் வச்சுகிட்டா அதுகளோட குடும்ப வாழ்க்கை பாலும் தேனும் கலந்ததுபோல இனிக்காதா என்ன?

(தட்டில் காபிகொண்டு வருகிறான் முத்தன்)

**முத்தன்** : கசப்பும் இனிப்பும் கலந்தது போலவும் இருக்குமுங்க!

**பரம** : என்னடா முத்தா! ஐயா நல்ல சேதி சொல்லும்போது நீ கசப்பைப் பத்திப்பேசறே?

**செல்வ** : கசப்பும் இனிப்பும் எப்படியடா கலக்கும்? கலந்தாலும் அது எப்படிச் சுவையாக இருக்கும்?

**முத்தா** : தோ! திக்காக்ஷனும் சர்க்கரையும் கலந்த இந்தக் காப்பியைப் பாருங்க. இது சுவையா இருக்கும். சந்தேகமிருந்தா குடிச்சிப் பாருங்க.

**இளங்** : பலே! முத்தன்! பேச்சிலே நீயொரு சித்தனப்பா. ஐயா! எடுத்துக் கொள்ளுங்கள். முத்தன் போட்ட காப்பிலே முழுச்சுவையுமிருக்கும்.

(எல்லோரும் காபி டம்பளரை எடுக்கின்றனர்.)

## காட்சி - 6

இடம் : கமலவேணி வீடு. காலம் : இரவு.

(கமலவேணி, தாழம்பூ, இளங்கோ ஆகியோர் இருக்கின்றனர்.)

**கமல** : இளங்கோ ! குடும்ப வாழ்க்கைக்குத் தேவையான ஒரு நல்ல கருத்தைச் சொல்ல வேண்டுமென்பதற்காகவே இந்த நாடகத்தை நாம் தயாரிக்கிறோம்.

**இளங்** : குடும்பத்திற்கா எங்கள் கல்லூரி ஆண்டு விழாவுக்கல்லவா நான் கேட்டேன் ?

**கமல** : குடும்பத்தில் பிறந்தோர்தானே கல்லூரி மாணவர்கள் ? கல்லூரிக் கலை நிகழ்ச்சிகளில்தானே குடும்ப வாழ்வுக்கான நல்ல கருத்துக்கள் இடம்பெறவேண்டும், இல்லையா ?

**இளங்** : ஆமாம், ஆமாம். நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம் என்றாரே புரட்சிக் கவி பாரதிதாசன் !

**தாழம்** : கலைக்குச் சிறந்த கருத்துத் தேவை. கருத்தை வெளியிட நல்ல இடமும் தேவை.

**இளங்** : கருத்தும் இடமும் மட்டும் போதுமா ?

தாழம்: நடிப்பதற்குத்தான் நாம் இருக்கிறோமே! கருத்துக் கலையினை அள்ளிக் கொடுக்கும் கருவிகளல்லவோ நாம்?

கமல: நல்லது கருவிகள் ஒழுங்காகச் செயல்படவேண்டும். ஒத்திகையைத் தொடங்குவோம். தலைவனும் தலைவியும் சந்தித்துப் பழகுகிறார்கள். ஒருவரையொருவர் விரும்பிக் காதலித்துத் திருமணம் புரிந்துகொள்ளுகிறார்கள். தமிழ்ப் பெருமகள் ஒருத்தி வந்து, இருவரையும் "பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழுக" என்று வாழ்த்துகிறாள். அவர்கள் களிப்பிலே திளைக்கிறார்கள். பெருமகள் கூறிய வாழ்த்து அவனுக்கு நினைவு வருகிறது. அவன் மனைவியிடம் சொல்லுகிறான். எங்கே? என்ன சொல்லுகிறான்?

இளங்: (பாடி நடிக்கிறான்) தாளம்: அடை.

ஆணெட்டும் பெண்ணெட்டும் ஆகப் பதினாறு
அருமைக் குழந்தைகள் பெறவேண்டும்
ஆகட்டும் போகட்டும் என்று சொல்லிப் பின்னர்
அடியேனை ஏமாற்றவிட மாட்டேன்.

தலைவி: ஐயயோ பதினாறு! அம்மம்மா பதினாறு!
ஆகாதென்னாலய்யோ நான் மாட்டேன்
ஆஸ்திக்கு ஆணொன்று ஆசைக்கு பெண்ணொன்று
அதுபோதும் இதமாகப் பெறுவேனய்யா.

வேறு - தாளம் - ரூபகம்

தலைவன்: ஆஃகா! கணவன் சொல்லினையே கடந்தால் கற்பு நிலைத் திடுமோ—அந்த உணர்வுடையவளாய் எனக்கு உடன்படலே தருமம்.

தலைவி ஐயயோ!....மன்னிக்க வேண்டும் அத்தான் என்றனின் மனத் தடுமாறியதே, எந்த எண்ணிக்கையானாலும் பிள்ளையை ஈன்றிட நான் தவறேன். (பணிகிறாள்).

கமல: பலே! இருவருக்குமே நடிப்பு நன்றாக வருகிறது. நன்றாகப் பாடி தைரியமாக நடிக்கவேண்டும். சபைக் கூச்சம் கூடாது.

இளங்: இந்தத் தலைவன் நிரம்ப மூர்க்கத்தனமான பேர்வழி போலிருக் கிறதே.

கமல: அதனால்தான் பதினாறு பிள்ளைகளைப் பெறவேண்டுமென்று மனைவியை வற்புறத்திப் பணியவைக்கிறான்!

இளங் தாழம்பூவிடம் இப்படி வற்புறுத்த எனக்கு வருத்தமாக இருக்கிறது.

தாழம் அதற்குப் பணிய எனக்கும் கசப்பாகத்தான் இருக்கிறது.

கமல: உங்களது சொந்த வருத்தத்தையும், பசப்பையும் ஒதுக்கிவைத்து விட்டு, நீங்கள் நாடகத்தின் பாத்திரங்களாக மாறவேண்டும். அப்பொழுதுதான் நாடகம் சோபிக்கும்.

இளங்: உங்கள் பாத்திரம்?

கமல: வாழ்த்துக்கூற வந்த பெருமகள். கதையின் கருப்பொருளை விளக்குபவள் அவள்தான்.

இளங் : எப்படி ?

கமல : பதினாறு பிள்ளைகளைப் பெறச் சம்மதித்த தலைவி, பத்துப் பிள்ளை களைப் பெற்று பலமிழந்தாள். வறுமையால் நிலைகுலைந்தாள். யாத்திரை சென்று பல வருடங்களுக்குப் பிறகு கூனிக் குறுகித் தடியூன்றியவளாய் ஊர் திரும்பினாள் பெருமகள். நோயுற்றுத் தள்ளாடும் தலைவியைக் கண்டாள். தலைவி வறுமையாலும், நோயாலும் மடிந்தாள். ஓடி வந்தான், தலைவன். கதறினான்; அழுது குமைந்தான். "பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ எங்களை வாழ்த்தியவள் நீதானே ?" என்று கேட்டான் பெருமகளை. அம்மையார் விளக்கம் சொல்லுகிறார்கள்.

இளங் : எப்படி ?

கமல : (பாடுகிறாள்)

கல்வியோடு கேள்வியும் கட்டழகும் ஊர்தியும்
கற்புடைய மனைவியும் பொற்புடைய மக்களும்
அறிவோடு ஒழுக்கமும் அன்புமும் நல் இல்லமும்
ஆனந்தபோகமும் ஆநிரையின் யோகமும்

நிலத்தோடு நீர்வளம் நிறைவுடைய புகழுமே
நீங்காத பொன்கலன் ஆகப்பேறு பதினாறு
இத்தனையும் பிள்ளைகளாய் பெறறுவிட முனைந்தாயே
சித்தமிதில் சென்றதனால் சீரழிவு வந்ததுவே !

இளங் : பிறகு, தலைவன் என்ன செய்கிறான் ?

தாழம் : நீங்கள்தானே தலைவர் ? என்ன செய்வீர்கள் ?

இளங் : ஐயயோ ! மதி மோசம் போனேனே ! நானும் அந்தக் கதிக்கு ஆளாகவேண்டும் ?

கமல : ஆம். அப்படித்தான் உங்களுக்கு மட்டுமல்ல இளங்கோ, எவர்க்கும் இதுவே நிலை. நாட்டின் பொது நிலையை விளக்குகிறோம் இப்படி. இது நாடகம்தானே ?

இளங் : அம்மாடி ! நான் பிழைத்தேன் !

(நெஞ்சில் கை வைக்கிறான்)

## காட்சி 7

இடம் : பரமசிவம் வீடு. காலம் : காலை.

(முத்தனும் பரமசிவமும் பேசிக்கொண்டே வருகின்றனர்)

பரம : முத்தா ! கல்லூரி ஆண்டு விழாவுக்கு அழைப்பு வந்திருக்கிறதே. போகாட்டி ஏதாவது நினைப்பாங்களாடா ?

முத்தன் : அவுங்க நம்பளை மதிச்சு அழைப்பு அனுப்பியிருக்காங்க, நாம்ப அவுங்களை மதிச்சு போகத்தானே வேணுமுங்க ? நம்ப சின்ன எசமான் நடிக்கிற நாடகம் வேறே இருக்கு துங்களே ?

பரம : ஆமாண்டா முத்தா ; நம்ப இளங்கோ நடிக்கிறது என்ன நாடகம் ? அது எப்படியிருக்கும் ?

முத்தன் : காலத்துக்குத் தகுந்த புதுக் கதைங்க !

பரம: புதுசா ? ஊம் . . . இப்பவெல்லாம் எவண்டா பழைய மாதிரி கதை எழுதருன் ? பழைய மாதிரி பாடருன் ? பழைய மாதிரி நடிக்கிருன் ?

முத்தன்: ஒங்களுக்கு எப்பவும் பழசுதான் பெரிசு! புது நாடகத்திலே தம்பியோட காதல் நடிப்பு பிரமாதமா இருக்கும்னு சொல்ருங்க எசமான் ?

பரம: காதல் நடிப்பா ? யாருகிட்டேடா காதல் ?

முத்தன்: காதலன் யாருகிட்டே காதல் பண்ணுவான் ? காதலிகிட்டே தான் பண்ணுவான்

பரம: பண்ணித் தொலேக்கட்டும்டா ! யார்டா அந்தக் காதலி ? அதை யல்ல கேக்கறேன்.

முத்தன். பாடகி மகள் தாழம்பூ காதலி ; மிராசுதார் மகன் இளங்கோ காதலன். நடிப்பு ! நடிப்பா அது ?

பரம: பின்னே உண்மையா ?

முத்தன்: வாழ்க்கையிலே உண்மை ! மேடையிலே நடிப்பு ! காதலோட லட்சணமே அது தானுங்களே !

பரம: டேய் ! டேய் ! என்னடா இது அக்கிரமம் ?

முத்தன்: காதலுக்குப் பேரு அக்கிரமம்னு நீங்க செய்யற காரியத்துக்கு என்ன பேரு வைக்கிறதாம் ?

பரம: அடே ! அதை எண்டா இழுக்கிறே இங்கே ? செல்வரங்கத்துக்கு இது தெரிஞ்சா நல்லா இருக்குமா ?

(செல்வரங்கம் வருகிருர்)

செல்வ: எது ? எது ? எனக்கு எது தெரியனும் ? எது தெரியக் கூடாதுன்னு சொல்றீங்க பரமசிவம் ?

பரம: வாங்க! வாங்க! ஒண்ணுமில்லீங்க ஐயா! கல்லூரி ஆண்டு விழாவுக்கு அழைப்பு வந்தது. அங்கே தம்பி இளங்கோ நடிக்கிற நாடகம் ஒண்ணு நடக்குதுங்க. அதைப்பத்தி பேசினேம். உங்க நினேவு வந்ததுங்க!

செல்வ என்னுடை நினேவா? அதுதான் முக்கியம் பரமசிவம் ! நெனேவு வரணும். நேத்துப் பாருங்க, என்னுடை ஏழாவது மகள் சண்பகத்தோட கல்யாணத்தைப் பத்திப் பேசினேம். இள்ங்கோவைப் பத்திய நெனேவுதான் வந்தது. நம்மைப் போல பையனுக்கும் அந்த நினேவு வரணுமே.

முத்தன்: நெனேவு வந்திடிச்சிங்க எசமான்.

செல்வ (ஆர்வத்தோடு) அப்படியா ? சண்பகத்தைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொல்லிட்டாஞ இளங்கோ ?

முத்தன்: இல்லீங்க!

செல்வ: என்னடா இல்லீங்க ?

முத்தன்: பொதுவிலே கல்யாணம் பண்ணிக்கிற நினேவுதானுங்க வந்திருக்கிறது. எந்தப் புத்திலே எந்தப் பாம்பு இருக்குமோ யார் கண்டாங்க ?

**செல்வ :** அதை நான் கண்டுபிடிக்கிறேன் ! பரமசிவம் கல்லூரி நாடகத்துக்குப் போவோமா ?

**பரம :** ஐயா ! அதுக்குத்தான் யோசனை பண்ணினேன்.

**செல்வ :** அதுக்கென்ன யோசனை நம்ப இளங்கோவோட நாடகத்தை நாம் பார்க்க வேணும் ?

**முத்தன் :** பெரியவங்க பார்க்கிற நாடகம், ஒரு நல்லதங்கா, அல்லி அர்ச்சுனு, பக்த குசேலர், அரிச்சந்திர மயான காண்டம்னு இருந்தா நல்லா சுவைக்க முடியுமுங்க !

**செல்வ :** டாய் ! அதிகப் பிரசங்கி ! நிறுத்தடா ! மயான காண்டத்தை மட்டுமல்ல ; காதல் காண்டத்தையும் சுவைக்கவும் ஒடம்பிலே திராணி இருக்குதுடா ! இருக்குது ! சும்மா ஒதருதே !

**முத்தன் :** மன்னிக்கணும் எசமான் ! ஒங்களுக்கு வயசு ஆயிட்டுதுன்னு தப்புக்கணக்கு போட்டுட்டேன்.

**செல்வ :** ஆமா . . திருச்சிக்கா. பரமசிவம், பொறப்படுவோமா ?

**பரம :** தோ ! வந்துட்டேன் ; போகலாமுங்க !

(உள்ளே போகிறார். பணம் எடுக்கிறார். செல்வரங்கம்)

**செல்வ :** முத்தா ! என்னோட மகளை இந்த வீட்டு மருமகளாகப் பண்றது ஒன்னாலேதான் முடியணும். இந்தா இதை வச்சுக்கோ (கொடுக்கிறார்)

**முத்தன் :** அதுக்கு எனுங்க பணம் ? நான் என்ன கருமாவா ? இருமாவா ? நீங்க பெரியவங்க். இப்படியெல்லாம் சின்னகைப் பண்ணப்படாதுங்க ? (மறுக்கிறான்)

**செல்வ :** சே ! இப்ப பெரியவங்க யாருன்னு எனக்கே புரியலியே.

**முத்தன் :** காலப்போக்கிலே எல்லாம் தெரிஞ்சுப் போவுது, வாங்க எசமான் !

(போகிறான்)

## காட்சி 8

**இடம் :** விழா மேடை **காலம் :** மாலை

(செல்வரங்கம், பரமசிவம், முத்தன் மற்றும் சிலர் இருக்கின்றனர். கல்லூரித் தலைவர் பேசுகிறார்)

**கல். தலைவர் :** பெரியோர்களே! தாய்மார்களே! மாணவர்களே! மாணவிகளே! நமது கல்லூரியின் இருபதாவது ஆண்டு விழா விணைச் சிறப்புற வைப்பது நுண் கலைப்பகுதியாகும். நுண் கலைப் பகுதியிலும் குறிப்பிடத்தக்க இசை,-நாடகம் இந்தப் பதினாறும் பெறுக. பூக்கடைக்கு விளம்பரம் தேவையில்லை. நாடகம் தொடங்குகிறது சுவையுங்கள்.

(மேடையில் ஒருபுறமாக எல்லோரும் உட்கார, திரை விலகுகிறது. பாடியவண்ணம் உற்சாகத்தோடு குதித்தாடிக் கொண்டு மேடைக்கு வருகின்றனர் தலைவியும், தலைவனும்.)

### பாட்டு—ஆதி தாளம்.

#### எடுப்பு

**இருவரும்:** ஆடுவமே பள்ளுப் பாடுவமே—இனி
அச்சமில்லை இன்ப நிலை தேடுவமே—நாம் (ஆடு)

#### தொடுப்ப

**தலைவன்:** நாடு முழுதும் வளம் கொழிக்குதடா—இங்கு
நல்ல தமிழ்க் கலைகள் செழிக்குதடா
பீடு நிறை காதல் இனிக்குதடா—மனம்
பேரின்பம் காண்பதில் துடிக்குதடா—நாம் (ஆடு)

**தலைவி:** காதல் மணம் புரிய அனுமதித்தார்—பெற்று
கருத்தோடு வளர்த்தவர் வாழவிடுத்தார்
சாதலைவென்று புகழ் பெறுவதற்கே—குறள்
சார்ந்திட்ட வாழ்வினி வருமெனக்கே—நாம் (ஆடு)

### பாட்டு—வேறு–அடதாளம்.

**தலைவன்:** கருத்து முடிந்தது காதலும் வென்றது
கருதுவாய்–பக்கம் வருகுவாய்
அடுத்து நிகழ்வது அழகி மணமடி
அதனையே–கொஞ்சம் நினைகுவாய்

**தலைவி:** பெற்றவர் ஒப்பினர் பெருமை கிடைத்தது
பேணுவோம்–இன்பம்–காணுவோம்
கற்றவர் வாழ்ந்திடக் கற்புடை வாழ்வினைக்
காட்டுவோம்–புகழ்–ஈட்டுவோம்

(இருவரும் தழுவுகின்றனர். முத்தன் ரசிக்கிறான். செல்வ ரங்கம் ஆத்திரத்தோடு எழுந்து உட்காருகிறார். கையில் மலர் மாலைகளோடு பெருமகள் வருகிறாள்.)

**பெருமகள்:**

### பாட்டு—சிந்து-பேகம்

1. காதலித்துக் களவியல் புரிந்தீர்—தமிழ்
கற்பியலின் வாசலிலே நுழைந்தீர்—இன்பச்
சோதனையில் முத்தமிழாய்
வாழ்கவென வாழ்த்துகிறேன்
வளமாய்-வாழ்க-நலமாய்

2. மாலையிட்டு மனமொன்றிக் கூடுவீர்—குறள்
மாண்புநிறை நற்குடியைக் காணுவீர்—காதல்
சோலையிலே பதினாறு
பேறுகளும் பெற்றுயர்ந்து
வாழ்வீர்-நலம்-சூழ்வீர்!

(மாலைகளைக் கொடுக்க தலைவனும் தலைவியும் மாலைமாற்றிக்கொண்டு பெருமகளை வணங்குகின்றனர்.)

பெருமகள் :

### வாழ்த்து—விருத்தம்

பசும்பாலும் சீனியும்போல் சேர்ந்துலகில்
பண்புடைய குடும்ப நலம் சுவைத்திடுவீர்
விசும்பதனில் தண்மதியும், அதனொளியும்
விளங்குவபோல் வாழ்க்கையினில் திளைத்திடுவீர்
நசுங்கி விடும் உணர்வுதனைச் செம்மையாக்கி
நல்லறத்தில் துணிவுடனே செலுத்திடுவீர்
பொசுங்கரிய நற்பேறு பதினாறுமிங்கு
பெற்றுயர்ந்து பெருமையுடன் வாழ்க! வாழ்க!

(அவர்கள் வணங்கி நிற்கப் பெருமகள் வாழ்த்திச் செல்லு கிறாள். பின்னர் தலைவனும் தலைவியும் மகிழ்வோடு பாடி யாடுகின்றனர்)

### பாட்டு—தாளம்—ராகம்

தலைவன் : வாழ்வாங்கு வாழுவோம் வளமாக வாழுவோம்
வலிவோடு தமிழ்வாழும் நாட்டிலே,
தாழ்வேதும் வருகுமோ? தரமேதும் குறையுமோ?
தன்மானம் காப்பனின் வீட்டிலே? நாட்டிலே (வாழ்).

தலைவி : குயிலாகக் கூவுவோம் மயிலாக ஆடுவோம்
குறைவில்லாப் பேரின்பம் பருகுவோம்
ஒயிலாக ஒளியாக ஒற்றுமையின் விளைவாக
உயர்வான வாழ்வுதனைப் பெறுகுவோம், பருகுவோம் (குயி.

(கைகோர்த்துப் பறந்து மகிழ்கின்றனர்)

### பாட்டு —தாளம்—அடை

தலைவன் : ஆணெட்டும் பெண்ணெட்டும் ஆகப் பதினாறு
அருமைக் குழந்தைகள் பெறவேண்டும்
ஆகட்டும் போகட்டும் என்று சொல்லிப்பின்னர்
அடியேனை ஏமாற்றவிட மாட்டேன்

தலைவி : ஐயையோ பதினாறு அம்மம்மா பதினாறு
ஆகாதென்னாலைய்யோ நான் மாட்டேன்
ஆஸ்திக்கு ஆணொன்று ஆசைக்குப் பெண்ணொன்று
அதுபோதும் இதமாகப் பெறுவேனய்யா.

### பாட்டு—தாளம்—அடை

தலைவன் : கணவன் சொல்லினையே கடந்தால்
கற்பு நிலைத்திடுமோ?—அந்த
உணர்வுடையவளாய் எனக்கு
உடன்படலே தருமம்

(அஞ்சுகிறாள்)

தலைவி : மன்னிக்க வேண்டுமத்தான் என்றனின்
மனந்தடுமாறியதோ—எந்த
எண்ணிக்கையானாலும் பிள்ளையை
ஈன்றிட நான் தவறேன்

(பணிகிறாள். தலைவன் அன்போடு தூக்கி விடுகிறான். இரு வரும் மகிழ்கின்றனர். செல்வரங்கம் துடிக்கிறார். முத்த னும், பரமசிவமும் சுவைக்கின்றனர்).

பாட்டு—தாளம்—ஆதி

இருவரும் : இன்பத்தின் எல்லை எதுவெனக் காண்போம்
ஈருடல் ஒருயிராய்—இணைந்தே
துன்பத்தை துயரினை துரத்திட முனைவோம்
துணைவனும் துணைவியுமாய்—துணிந்தே

(இருவரும் கைகோர்த்த வண்ணம் உள்ளே செல்லுகின்றனர். பல ஆண்டுகள் ஓடி மறைகின்றன. கிழவியாக, கையிலே தடியூன்றியவண்ணம் பெருமகள் வருகிறாள்.)

பாட்டு—தாளம்—ஆதி

எடுப்பு

பல்லாண்டு கழிந்தனவே—யாத்திரையில்
பலவூரும் சென்றேனய்யா—என் வாழ்வினில் (பல்)

தொடுப்பு

நல்லாண்டும் பொல்லாண்டும் நடந்து முடிந்தனவே
நானிலத்தின் மாறுதலால்
மேனிலைக்குக் காரணமாய் (பல்)

இவ்வுலகின் வாழ்க்கையிலே எத்தனையோ புதுமைகள்
இதமும் பதமுமாக
எற்றவர்கள் வாழுகிறார். (பல்)

பிறந்ததும் இறந்ததும் பெருமையால் சிறந்ததும்
பிணிபசி மூப்புகளாய் பெற்றழியும் மக்களுடன் (பல்)

(அப்பொழுது தலைவிரி கோலமாக தளர்ந்து தள்ளாடி வருகிறாள் தலைவி. பார்த்து வியக்கிறாள் பெருமகள்)

பாட்டு—தாளம்—ஏகம்

பெரும : யாரம்மா, யாரம்மா யாரம்மா நீ ?

தலைவி : பாரம்மா, பாரம்மா, பாரம்மா நீ ?

பாட்டு—தாளம்—ஆதி

எடுப்பு

தலைவி : பத்துபிள்ளை பெற்றவளம்மா—ஐயய்யோ நான்
பரதேசியானவளம்மா (பத்)

தொடுப்பு

பெற்றபிள்ளை அத்தனையும் பேணி வளர்த்துவிட
உற்ற பொருள் எதுமில்லை உணவில்லை உடையில்லை (பத்)

எடுப்பு

பெரும : காதலித்து மணந்தவளே—கற்பரசியே!
கதியென்ன நேர்ந்ததடியே? (காத)

தொடுப்பு

சாதலுக்கோ பிள்ளையடி சக்தியில்லாத தேகமிதில் ?
வேதனையில் வெந்தவளே விதிதானோ ? மதி தானோ ?
(காத)

**பாட்டு—வேறு தாளம்—அடை**

**தலைவி:** கணவனின் சொற்படி பெற்றேனம்மா
காத்திட வகையேதும் கற்றேனில்லை

**பெரும:** அடிமையோ, பெண்ணினம் அநியாயமோ !
ஆணுலகுக்கிது சுகபோகமோ ?

**தலைவி:** யாரை நோவதிலும் பயனில்லையே
சாவதை விட வேறு வழியில்லையே

**பெரும:** குழந்தைகள் வாழ்வுக்கு யார் துணையோ?
குடும்பத்தைப் பேணுதல் யார் கடனோ?

**தலைவி:** ஐயோ! அம்மா!

(சுருண்டு விழுகிருள்)

**பெரும:** அடியே! மகளே!

(மூக்கில் விரல் வைத்து இறந்துவிட்டதறிகிருள் பெருமகள் பிரமித்து நிற்கிருள்)

**வருத்தம்—வருத்தம்**

மலர்சூடி மஞ்சமதில் விளையாடிக் களித்தவளே !
மக்கள்தமை மிதமிஞ்சிப் பெற்றதனால் நசிந்தவளே!
நலமேதும் கிடைக்காது பசியாலும் பிணியாலும்
நலிந்து மனம் சிதைந்து நடுத்தெருவில் மடிந்தாயே!

(பதறி ஓடி வருகிருன் தலைவன்)

**தலைவன்:** எங்கே? எங்கே? எங்கே? என் மனைவி?

**பெரும:** இங்கே, இங்கே கிடக்கிருள் பிணமாக!

**பாட்டு—தாளம்—அடை**

**தலைவன்:** ஐயயோ என் தாரம் என்னவானுள்?

**பெரும:** ஆவி பிரிந்தின் பலோகம் போனுள்

**தலைவன்:** வறுமைப் பிணியுடன் போரிட்டவள்

**பெரும:** வயிற்றுப் பிள்ளையுடன் போய்விட்டனள்

**தலைவன்:** ஆ! ஐயா! என் மனைவி இறந்தாளா? ஐயோ!

(மேல் விழுந்தழுகிருன்)

**பாட்டு—முகாரி—தாளம்—சாபு**

எடுப்பு

**தலைவன்:** ஆருயிர் மனைவியே மடிந்தனையோ?
அடியேனை வெறுத்துயிர் பிரிந்தனையோ—ஐயோ (ஆரு)

தொடுப்பு

பேருலக வாழ்வினில் பெருமை வருகுமென்று
பெற்றோமே பிள்ளைகளை உற்றோமே துன்பநிலை (ஆரு)

(தேம்பி அழுகிருன்)

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.

பாட்டு—தாளம்—ஏகம்

பெரும : அதிகம் பெற்ருல் பெருமையென்று
கருதிக்கெட்டவனே!
அறிவிழந்து மணந்தவளை
அழித்து விட்டவனே!
எதிலுமொரு அளவில்லையோ?
முறையும் இல்லையோ?
இதை மறந்தால் குடும்ப நலம்
விளங்குவதுண்டோ? (அதி)

(சினந்து எழுகிருன்)

தலைவன் : அடிப்பாவி! இப்போது என்ன சொன்னுய்?

பெரும : எப்போதும் அழியாத நீதி சொன்னேன்!

பாட்டு—அடாணு, ரூபகம்

தலைவன் : பதினுறுமே பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்திட
வாழ்த்தினவள் நீதானல்லவோ?—இன்று
சதிகாரன் நானென்று பழிபோட்டுத் தூற்றுருய்
இருநாக்குடன் விளையாடுகிருய்!

பெரும : பதினுறு பெருமைக்கும் தவருகப் பொருள் செய்து
பாழாக்கினுயுன்றன் குடியை—இந்த
மதிபோன செயலுக்கும் கதிபோன நிலைமைக்கும்
மடமையே காரணமாகுமே!

பாட்டு—தாளம்—ஆதி

தலைவன் : எங்களை நீ வாழ்த்தியதின் பொருளென்னவோ?
இந்த நிலை தன்னிலேனும் விளக்குக தாயே.

பெரும : பெறுக பதினுறென்று நான் வாழ்த்தினேனடா
தேறடா உண்மை இதைக்கேளடா தம்பி.

மெட்டுவேறு—தாளம்—ஆதி

பெரும : கல்வியோடு கேள்வியும் கட்டழகும் ஊர்த்தியும்
கற்புடைய மனைவியும் பொற்புடைய மக்களும்
அறிவோடு ஒழுக்கமும் அன்னமும் நல் இல்லமும்
ஆனந்த போகமும் அநீ
நிலத்தோடு நீர்வளம் நிறைவுடைய புகழுமே
நீங்காத பொன்கலன் ஆகப்பேறு பதினுறு
இத்தனையும் பிள்ளைகளாய் பெற்றுவிட முனைந்தாயே
சித்தமதில் சென்றதினுல் சீரழிவு வந்ததுவே!

(தலைவன் பதறுகிருன்)

தலைவன் : ஆ! ஐயோ! மெய்யா? ஐயோ!

பெரும : ஆமாம், மகனே! இதுவே நீதி.

பாட்டு

தாளம்—அடை

தலைவன் : ஐயயோ! மதி மோசம் போனேனே—சொல்லை
ஆராய்ந்து பாராமல் வீணுனேன்
வையகம் தூற்றுமே என்னறிவை—நல்ல
வாழ்வினை நுகராத சின்னவனை

(மனைவியின் பிணத்தின் முன்பு மண்டியிடுகிருன்)

மன்னிப்புத் தருவாயோ என் மனைவி—கற்பின்
மாணிக்கமே என்றன் பொன்னழகி!
என்ன நினைத்து நீ மடிந்தனையோ?—என்னை
இறவாத பிணமாக்கி மறைந்தனையோ?

(மயங்கி விழுகிறான். பின்னர் மெதுவாக எழுந்திருக்கிறான்)

பாட்டுவேறு—தாளம்—ஆதி

**பெருமகள்** : அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாம்
அளவோடு பெற்று அறிவோடு வாழ்க!

**தலைவன்** : தெளிவுக்கு எங்கள் வாழ்விது கண்டீர்
திட்டமில்லாமலே பெற்றிடவேண்டாம்

**எல்லோரும்** : வாழ்க தமிழ் மொழி! வாழ்க தமிழ் நிலம்
வாழிய தமிழர்கள் வாழியவே!

வாழ்வு வளம்பெற குடும்பநலம் பெறும்
வகையினை உணர்ந்து வாழியவே!
வகையினை உணர்ந்து வாழியவே!

முற்றுகிறது.

(எல்லோரும் கைதட்டுகின்றனர். திரை விழுகிறது. செல்வரங்கம் ஆத்திரப்படுகிறார்)

**கல்லூரித் தலைவர்** : (முன் வந்து) பெரியோர்களே! மாணவ மாணவியரே! "ஆடுவோமே பள்ளுப்பாடுவமே இனி அச்சமில்லை இன்பநிலை தேடுவோமே" என்று தொடங்கிய நாடகம், "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாம், அளவோடு பெற்று அறிவோடு வாழ்க" என்று முடிவு பெறுகிறது. நாம் ஆடிப்பாடி மகிழ்ந்து அச்சமற்ற இன்பநிலை பெற வேண்டுமானால், குடும்பநலத் திட்டம் காட்டுகின்ற வழிப்படி கட்டுப்பாடு செய்துகொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அளவுக்கு மிஞ்சாமலும் அமுதமான வாழ்வை நஞ்சாக ஆக்காமலும், அளவோடு மக்களைப் பெற்று, அறிவோடு வாழ்ந்திட முடியும். இவ்வரிய கருத்துள்ள—பயனுள்ள நாடகத்தினை நடத்திய கமலவேணி குழுவினர்க்கு எங்கள் மனம் நிறைந்த நன்றியை..........

**செல்வ** : (எழுந்து) நிறுத்துமையா பேச்சை! பிரமாதப்படுத்தாதீர்! இந்த நாடகத்திலே என்னய்யா கருத்து கொடிகட்டிப் பறக்குது?

**க. தலைவர்** : குடும்ப வாழ்வுக்குத் தேவையான கருத்துக் கனிகளின் கலைப்படையல் இந்த நாடகம். பிரத்தியட்ச வாழ்வின் படப்பிடிப்பு!

**செல்வ** : குடும்பத்திலே அதிகம் பிள்ளை பெறக்கூடாதன்னு சொல்றவங்க மொதல்லே தமிழ் வருஷத்தை மறந்திடனும் வாத்தியாரே! தெரியுமா சங்கதி?

**க. தலைவர்** : வருஷத்தை ஏன் மறக்க வேண்டும்?

**செல்வ** : பிரபவ முதல் அட்சய முடிய அறுபது வருஷங்களும், நாரத பகவான் பெத்த அறுபது பிள்ளைகளோட பெயராக்கும்.

**முத்தன்** : அதுக்கு பதிலாத்தான் இப்ப திருவள்ளுவர் ஆண்டு வந்துட்டுதே. அது தேவையில்லையே எசமான்?

**செல்வ** : முத்தா! நீ நிறுத்தடா! பிரின்சுபாலைக் கேக்குறேன். மண்ணுக்கு மரம் பாரமா? மரத்துக்கு இலை பாரமா?

க. தலைவர்: இல்லை.

செல்வ: கொடிக்குக் காய் பாரமா

க. தலைவர்: இல்லை, இல்லை.

செல்வ: பெற்றெடுத்த குழந்தை தாய்க்குப் பாரமா?

க தலைவர்: பாரம் மட்டுமல்ல, அதிகமானால் பெரும் பாரம். சுமக்க முடியாமல் கழுத்தே ஒடிந்துவிடும்.

செல்வ: எப்படி?

க. தலைவர்: மரமும், கொடியும் அறிவற்ற தாவர வர்க்கம். பிறர் உதவியால் வாழுபவை. பெண் அறிவு படைத்த மனித வர்க்கம். தன்னுழைப்பால் வாழ்பவள். மரத்தையும் மனித வர்க்கத்தையும் ஒன்றாகக் கருதுபவன் விழிகண் குருடன்; அல்லது விபரீதப் போக்கனாக இருக்கவேண்டும்.

செல்வ: (சினந்து) சே! உங்கள் விழாவும் கெட்டது; நாடகமும் கெட்டது, நீங்களும் கெட்டீங்க!

(வேகமாகப் போகிறார்)

பரம: (எழுந்து) டாய் முத்தா!

முத்தன்: எசமான்!

பரம: இதென்னடா வம்பாப் போச்சு! வாடா, வா; போயி அவரை சமாதானப் படுத்துவோம்.

முத்தன்: வாங்க எசமான்! வாங்க! பட்டுச் சேலை கட்டின பெண்டாட்டி திருவிழாவுக்குப் போனா, புருஷங்க முக்காலியைத் தூக்கிக் கிட்டுப் பின்னாடியே போகவேண்டியது தானே?

(இருவரும் வேகமாகப் போகின்றனர்)

## காட்சி 9

இடம்: தெரு

காலம்: இரவு

(செல்வரங்கம், பரமசிவம், முத்தன் மூவரும் வருகின்றனர்)

செல்வ: பரமசிவம்! கல்லூரித் தலைவர் பேசினதைப் பத்திக்கூட நான் கவலைப்படலே! அந்தப் பாட்டுக்காரி மகளோட நம்ப இளங்கோ காதல் பண்ணினதும், கைகோத்துகிட்டு ஆட்டம் போட்டதும் எனக்குக் கொஞ்சம்கூட பிடிக்கலேங்கறேன்!

முத்தன்: அப்ப அவளை நெனச்சிகிட்டு ஒரலை இடிச்சிருக்கீங்க எசமான்!

பரம: டாய் முத்தா! பெரியவங்க கோபத்திலே இருக்கிறப்போ, அதை யும் இதையும் பேசாதேடா!

செல்வ: பரமசிவம்! முத்தன் சொல்றது ரொம்ப சரி. அந்தக் கமல வேணி மேலே வந்த காபத்தைத்தான் கல்லூரித் தலைவர் மேலே வீசினேன். இந்தக் காதல் நாடகத்தை என்னோட மகள் சண்பகம் பாத்திருந்தா என்ன நெனச்சிருப்பாள்?

முத்தன்: இந்தப் புருஷன் எனக்கு வேணும்னு சொல்லி இருப்பாங்க எசமான்.

செல்வ : நல்ல வேளை. நான் மாத்தரம் வந்தேன். பரமசிவம்! தாழம் பூவை நம்ப இளங்கோ உண்மையிலேயே காதலிக்கிறதாகச் சொல்றுங்களே! அது பொய்தானே?

பரம : ஐயா! பொய்யாத்தான் இருக்கணும்னு நெனைக்கிறேன்.

முத்தன் : எந்தப் புத்திலே எந்தப் பாம்பு இருக்குமோ?

செல்வ : எந்தப் புத்திலே எந்தப் பாம்பு இருந்தாலும் சரி, கடிச்சா தீங்குதானே? அதனாலே அந்தப் பாம்பை சாகடிக்கணும். தகப்பனில்லாத வளர்ந்தவள் தாழம்பூ! அவ ஒரு பூநகாம்!

முத்தன் : இருந்தாலும் அவளோட அப்பன் ஒரு தமிழ்ப் பேராசிரியருங்க. அவுங்க நல்ல குடும்பம!

செல்வ : என்னை விடவா? என்னோட குடும்பம் எவ்வளவு பெரிசு? சொத்து மதிப்பு என்ன தெரியுமாடா முத்தா?

முத்தன் : தெரியுமுங்க, பத்து லட்சம்!

செல்வ : (பழித்து) பத்து லட்சம்! சொச்சம் எங்கே போறதுடாய் முத்தா!

முத்தன் : எசமான்.

செல்வ : என் ஏழாவது மகளுக்கு நான் சீதனமா கொடுக்கப்போறதே ஒரு லட்சமடா! ஒரு லட்சம்! சின்ன எசமான் கிட்டே சொல்லிவை.

முத்தன் : ஆகட்டுமுங்க. சொல்லிவைக்கிறேன்.

செல்வ : பரமசிவம்! நம்ப குடும்ப சம்பந்தம் கண்டிப்பா ஏற்படாகணும். காதல் கீதல்னு இளங்கோ எதையாச்சும் கற்பனை பண்ணி மனக்கோட்டை கட்டியிருப்பான். அதை ஒடைச்சாகணும்! என்னை அவமானப்படுத்தின கமலவேணியோட கருவத்தை அடக்கியே தீரணும். என்ன சொல்றிங்க?

பரம : ஆகட்டுங்க. ஒங்க மனம் போலவே செய்வோம். ஒங்க மகளைப்போல என் மகனும் சீரும் சிறப்புமா வாழனும்னுதான் நானும் நெனைக்கிறேன். அது தானே தகப்பனோட கடமையும்?

செல்வ : பலே! பரமசிவம்! அப்படிச் சொல்லுங்க. நம்ப இளங்கோ அந்தச் சிறுக்கியைத்தான் கட்டிக்கவேன்னு சொன்னா நீங்க என்ன செய்யணும் தெரியுமா?

(செவியில் ரகசியமாக ஏதோ சொல்கிறார்)

பரம : ஆகட்டுங்க. அப்படியே செய்யறேன்.

செல்வ : ஆமா. மறந்திடாதிங்க. நான் வரட்டுமா? சீக்கிரமா நிச்சய தாம்பூலம் நடத்திடுவோம் பரமசிவம்! நாள் கடத்தாதிங்க. நான் வர்றேன்.

பரம : நல்லதுங்க.

(அவர் போகிறார்)

முத்தன் : உம்! எந்தப் புத்திலே எந்தப் பாம்போ?

பரம : டாய் முத்தா! ஏண்டா எப்பப்பாத்தாலும் பாம்பைப் பத்தியே பேசறே?

முத்தன் : இங்கே அதோட நடமாட்டந்தானே கண்ணை உறுத்துதுங்க!

பரம : கண்ணையும் உறுத்தவேணும், காதையும் கிழிக்க வேணாம். போய் வேலையைப் பாரு!

(போகிறான் முத்தன்)

## காட்சி 10

இடம் : கமலவேணி வீடு. காலம் : முற்பகல்.

(இளங்கோ. கமலவேணி இருவரும் இருக்கின்றனர்)

கமல : இளங்கோ! நம்முடைய நாடகத்தைச் சாக்காக வைத்துக் கொண்டு அந்தப் பிரவு என்னை அவமானப்படுத்தவே விரும்பினூர்.

இளங் : நல்ல மூக்கறுப்பு! அவரது முயற்சியை கல்லூரித் தலைவர் அழகாகத் தோற்கடித்துவிட்டார்.

கமல : செல்வரங்கம் பொல்லாத குணம் படைத்த நல்ல பாம்பு அடிப்பட்டுச் சென்றது காத்திருந்து கடிக்கும் என்பார்கள். உன் அப்பாவும், அவர் வார்த்தைக்கு மீற மாட்டாரே?

இளங் : எங்கப்பா அவருக்கு அளவுக்கு மிஞ்சி மரியாதை காட்டுகிறூர். அது ஏனென்று புரியவில்லை.

கமல : இதையெல்லாம் முன்னிட்டு நான் ஒரு முடிவு செய்திருக்கிறேன். இளங்கோ! என்னிடம் வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் தாழம்பூவை நீ மணக்க விரும்புவது எனக்குத் தெரியும்.

இளங் : நிரம்ப மகிழ்ச்சி! நானே......அதை......உங்களிடம் .. ..

கமல : தேவையில்லை. ஒரு பேராசிரியரின் மகளான தாழம்பூவை மனந்துகொள்ள, உன்னைப்போன்ற ஒரு பட்டப்படிப்பு மாணவனுக்கு இருக்கும் தகுதி வேறு யாருக்கு இருக்க முடியும்? ஆனால் எனது விருப்பம்......

இளங் : என்னவென்று சொல்லுங்க.

கமல : "செய்தக்கவல்ல செயக்கெடும், செய்தக்க செய்யாமையானும் கெடும்" என்ற வள்ளுவர் வழியில் செல்பவன் நான். செல்வரங்கமும், உன் அப்பாவும் எனது இலட்சிய விரோதிகள். நான் அழுவதைக்கண்டு அவர்கள் சிரிக்க விரும்புகிறூர்கள்.

இளங் : நீங்கள் நினைப்பதுபோல், என் தந்தை அவ்வளவு கொடியவரல்ல.

கமல : ஒரு கொடியவனின் கையிலிருக்கும் கூர்மையான வாள்! அதற்கு நான் தப்பியாகவேண்டும். ஆகவே இளங்கோ! உங்கள் திருமணத்திற்கு நான் ஒரு நிபந்தனை விதிக்கிறேன்.

(கையில் காபி டம்ளர்களோடு தாழம்பூ வருகிறாள்)

இளங் : நிறைவேற்றக் கூடியதுதானே ?

கமல : மிகச் சுலபம். தாழம்பூவை நீ மணந்துகொள்ள விரும்பினூல் அவள் மூன்று குழந்தைகளுக்கு மேல் பெற்றுவிடாமல் நீ குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ளவேண்டும்.

இளங் : அடேயப்பா! நான் என்னவோ என்று பயந்து போய்விட்டேன். இந்த நிபந்தனை எனக்கு நானே விதித்துக்கொள்ள வேண்டியதாயிற்றே.

கமல : இதை உனது வாக்குறுதியாக நான் வைத்துக்கொள்ளலாமா?

இளங் : மெய்யாக, நிச்சயமாக உண்மையாக இது என் வாக்குறுதி !

கமல : அப்படியானல், காபியைக் கொடு தாழம்பூ !

தாழம்பூ : அம்மா! வாக்குறுதி கொடுத்தவருக்கு நான் காபிதானு கொடுக்கவேண்டும்?

கமல : இப்பொழுது கொடுக்க காபிதானே தயாராக இருக்கிறது ? மற்றதை பிறகு பார்த்துக்கொள்ளுவோம். கொடு.

(கொடுக்கிருள். பெற்றுக்கொள்கிருன் இளங்கோ)

இளங் : காபியும் இன்றைக்குத்தான் எனக்குச் சுவை கொடுக்கும் !

கமல : இல்லே இளங்கோ! உன் அப்பாவின் அனுமதி பெற்ற பிறகுதான் அந்தச் சுவை முழுமையாகும் !

இளங் : திருமணத்திற்கான அனுமதி தானே ? நாளேயே பெற்று வருவேனம்மா.

கமல : அது மிக முக்கியம், மறவாதே !

(உள்ளே செல்லுகிருள். குடிப்பதை நிறுத்தி, தாழம்பூவை உற்றுப் பார்க்கிருன் இளங்கோ. புன்னகை புரிகிருன்)

தாழம்பூ : நீங்கள் இப்போது சுவைக்கவேண்டியது காபியை.

இளங் : காதலேச் சுவைக்கவும் உரிமை பெற்றுவிட்டேன். தாழம்பூ இனிமேல் நான் தலேவன். நீ தலேவி.

தாழம்பூ : ஆனுல், நீங்கள் தலேகீழாக நின்ருலும் நாடகத்தலேவி போல் நான் நடக்கவே மாட்டேன்.

இளங் : நான் மட்டும் என்னவாம்? பெறவேண்டியது பதினுறல்ல மூன்றுதான் என்பது முடிவாகிவிட்டதே ! தாழம்பூ !

(கையைப் பற்றுகிருன்)

தாழம்பூ : எந்த முடிவு எப்படியானுலும் இந்தத் தாழம்பூ என்னமோ மணந்த பிறகுதான் மணம் வீசும். விடுங்கள் கையை

(விடுவித்துக்கொண்டு உள்ளே ஓடுகிருள் திரும்பித் திரும்பி குறும்பாகப் பார்த்த வண்ணம்).

## காட்சி 11

இடம் : பரமசிவம் வீடு காலம் : மாலே.

(பரமசிவம் நாற்காலியிலமர்ந்து, பத்திரிகை படித்துக்கொண்டிருகிகிருர். மகன் இளங்கே மெதுவாக வருகிருன். நின்று கவனிக்கிருன்)

இளங் : (குழைவோடு) அப்பா !

பரம : (மௌனம்)......

இளங் : அப்பா......அப்பா......

பரம : (திடுக்கிட்டுப் பார்த்து) ஓ! இளங்கோவா? வாடா தம்பி, உட்காரு. (பக்கத்திலிருந்த நாற்காலியில் அடக்கமாக அமருகிருன்)

இளங் : அப்பா நீங்கள் எனக்குத் தந்தை மட்டுமல்ல. தாயுமானவர், இல்லேயா?

பரம : ஆமாம். எதுக்கடா இந்தப் பீடிகை?

இளங் : என்னைப்பெற்ற தாயிடம் சொல்லவேண்டிய செய்தி. தாயற்ற பிள்ளையாதலால் தந்தையிடம் சொல்லுகிறேன். அதற்குத்தான்......

பரம : தாராளமா சொல்லுடா தம்பி! ஒன்னோட ஆசையை நான் நிறைவேத்தறேன்.

இளங் : நமக்குக் கடன் கொடுத்திருக்கின்ற பெரியவர் செல்வரங்கம், எனக்குப் பணப்பேராசை காட்டி அவருடைய சண்பகத்தை என தலையில் கட்டப்பார்க்கிறார். அந்தப் பெண்ணை நான் விரும்பவில்லையப்பா!

பரம : சீதனம் லட்ச ரூபாயடா தம்பி.

இளங் : இலட்சாதிபதியாக வாழ்வதைக் காட்டிலும், லட்சியவாதியாக வாழ்வதையே நான் விரும்புகிறேன்.

பரம : ஓ! அவ்வளவுக்குத் துணிஞ்சிட்டியா? என்னப்பா ஒன்னோட லட்சியம்?

இளங் : நான் காதலிக்கும் தாழம்பூவை மணந்துகொண்டு, கட்டுப்பாடான குடும்ப வாழக்கை நடத்தவேண்டும், அப்பா.

பரம : பலே, ஒருநாளைக்கு இப்படிச் சொல்லுவேன்னு எனக்கு அப்பவே தெரியும்.

இளங் : அப்படியானால், நீங்கள் அனுமதியளிப்பதில் தடையேதுமில்லையே?

பரம : ஒன்னு இருக்குதே! தம்பி! ஒனக்குக் கல்யாணத்தை முடிச்சப் பறந்தான் நம்மோட குடும்பம் பெருகணும். அதுக்காக ஒன்னைக் கட்டிக்கிறவ பதினாறு கொழந்தைகளைப் பெறணுங்கிறது என்னோட ஆசை!

இளங் : (வியந்து) என்ன? பதினாறு?

பரம : பதினாறென்ன, இருபதுகூட பெத்துக்கொடுப்பா லட்சாதிபதி சண்பகம். அந்தப் பிட்சாதிபதி தாழம்பூ அதுக்குச் சம்மதிப்பாளா?

(முத்தன் வந்து நிற்கிறான்)

இளங் : அவள் சம்மதித்தாலும்.... நமக்கு....

பரம : அவளோட அம்மா சம்மதிக்க மாட்டாள்! அதுக்குத்தான் சொல்லவர்றேன். காதலிக்கிறவளையே நீ கல்யாணம் பண்ணிக்க. நான் மறுக்கலே. ஆனா, என்னோட ஆசை இது. அவள் பதினாறு பிள்ளைகளைப் பெத்துக் கொடுக்கணும். ஒன்னு கொறைஞ்சாலும் ஒனக்கு வேறே கல்யாணம் பண்ணுவேன். இந்த நிபந்தனைக்கு அந்தக் கமலவேணி ஒத்துக்கணும்!

இளங் : அப்பா! இது பயங்கரமான நிபந்தனையப்பா!

பரம : காதலும் பயங்கரமானதுதானே?

முத்தன் : அதெல்லாமில்லீங்க எசமான்! வெளியே தெரியாமெ இருக்கிற வரைக்கும் பயங்கரம், நாலுபேருக்குத் தெரிஞ்சி போயிட்டா இன்பகரமாயிடும்!

பரம : முத்தா! இது தம்பியோட கல்யாண விஷயம்!

முத்தன் : இதைத்தான் எசமான் நானும் சொல்றேன்.

பரம : என் மகன், என்னோட நிபந்தனைக்கு ஒத்துக்கத்தானே வேணும்?

முத்தன் : ஒங்களோட மகன் ஒங்களோட நிபந்தனைக்கு ஒத்துக்கணும். எந்த நிபந்தனையை மத்தவங்களுக்குப் போடறிங்களோ, அந்தக் கொள்கைப்படி நீங்களும் நடந்துக்கணும், எசமான்!

பரம : நான் என்னடா தவறி நடந்து போட்டேன் ?

முத்தன் : அந்தத் தவறு மாலதியைக் கேட்டாலல்ல தெரியும் ?

பரம : (திடுக்கிட்டு, சினந்து) ஆ ! அயோக்கியப்பயலே ! என்னடா, என்னடா சென்னே? என்னை பயமுறுத்தவா பாக்கறே? போடா வெளியே !

முத்தன் : எசமான்!......வந்துங்க......போயிடுவேன்......ஆனு....

பரம : பேசாதே. அதைப்பற்றி வாயைத் திறக்கிறதானு நீ இங்கே நிக்கவே கூடாது.

முத்தன் : தோ! வாயை மூடிகிட்டேன்.

(கையால் வாயை மூடிக்கொள்கிருன்)

இளங் : முத்தனை ஏனப்பா இப்படிக் கடிந்துகொள்கிறீர்கள்?

பரம : நான் கண்ணுங்கருத்துமா வளர்த்த அன்பு மகன். என்னுடை ஆசையை மதிக்கலே ! இந்த மடையனுவது என்னுடை நிலையைப் புரிஞ்சுக்கவேணும்? தடிக்கு மிஞ்சின மொடா வாகருனே !

இளங் : (வருந்தி) அப்பா! எனது நிலைமையைச் சற்று எண்ணிப் பாருங்கள். நான் தாழம்பூவை மணந்து வாழ்வதை கமலவேணியும் தடுக்கவில்லை. நீங்களும் மறுக்கவில்லை. மகப்பேறு வந்துதான் குறுக்கே நிற்கிறது.

பரம : எப்படி ?

இளங் : மூன்றுக்குமேல் பெறக்கூடாது என்பது கமலவேணியம்மாள் போட்டிருக்கும் நிபந்தனை. பதினறு பெறவேண்டும் என்பது உங்கள் நிபந்தனை !

பரம : ஓ ! அந்தம்மா இப்படியொரு நிபந்தனை போட்டிருக்காங்களா? அப்படியானு அது நடக்காது. நீ தாழம்பூவை மறந்திட்டு சண்பகப்பூவை தேடிக்க வேண்டியதுதான் !

இளங் : அது என்னல் முடியாத காரியம்மப்பா.

பரம : இது என்னல் முடியாது காரியமப்பா.

இளங் : மெய்யாகவா ?

பரம : இதிலே பொய்வேறயா ? முடியாதுடா தம்பி. இந்தக் கல்யாணம் நிச்சயமா முடியாது.

(நின்று வருந்தி, நிலைகுலைந்து செல்கிருன் இளங்கோ)

முத்தன் : எசமான். சண்பகப்பூவைப் பத்தி சொன்னிங்களே ! அது வேனும் எசமான்.

பரம : ஏண்டா வேனும் ?

முத்தன் : அது கசங்கின பூவுங்க எசமான் ! நேத்துத்தான் அந்த ரகசியம் எனக்குத் தெரிஞ்சுது.

பரம : (வியந்து) சண்பகம் கசங்கிய பூவா ? எப்படி ?

**முத்தன் :** நியாயம் நடத்தை, பழக்க வழக்கம், நல்லது கெட்டது எதிலி யும் குடும்பம்னு ஒரு அமைதி இருக்கணுமுங்க! பிரபு செல்வரங்கத்தோட பெரிய குடும்பத்திலே அமைதிக்கு எடமே கிடையாது.

**பரம :** ரொம்ப பணக்காரனுக்கும், ரொம்ப ஏழைக்கும் வாழ்க்கையிலே அமைதி இருக்காது.

**முத்தன் :** அத்தோட குடும்பமும் பெரிசு, கேக்கணுமா? மக்க மருமக்க, சின்னது, பெரிசு, படிக்கறது, படிக்காதது, எல்லாரையும் திருப்திபண்ண முடியலே. பாவம்! திக்குமுக்காடுராரு!

**பரம :** அதனுலே?

**முத்தன் :** ஏழாவது மக சண்பகம், அவளுக்கேத்த காதலனை அவளா கவே தேடிக்கிட்டா.

**பரம :** (குழம்பி) ஊம்?... நெசம்மாவா?....முத்தா! இதென்னுடா புதிய தலைவலி? வரதட்சணை ஒரு லட்சமா?

**முத்தன் :** அது பழைய தலைவலியே நீங்கலே! உடனே ஒங்களைப் பார்க் கணும்னு துடியா துடிக்குதுங்க மாலதியம்மா, பொறப் படுங்க.

**பரம :** முத்தா! நான் இப்ப என்னடா செய்யட்டும்? எப்படிடா வரட்டும்?

**முத்தன் :** சரி இப்பவேணும். ராத்திரிக்கு வழக்கம் போல வந்து சேருங்க.

**பரம :** முத்தா! யாரு முன்னுடியும் அவளை பத்தின பேசசையே எடுக் காதேடா! என்னேட மூச்சே அடங்கிப் போயிடும் போல இருக்குதுடா.

**முத்தன் :** ஐயா! வேணுமுங்க. அப்படி எதாச்சும் ஆயிடப்போவுது. தைரியமா இருங்க, தோ தலைவலி மருந்து கொண்டர் றேன்.

(உள்ளே போகிருன்)

## காட்சி 12

**இடம் :** கமலவேணி வீடு. **காலம் :** மாலை.

(கமலவேணியும், இளங்கோவும் இருக்கின்றனர்)

**கமல :** நல்ல செய்தியோடு வருவாயென்று எதிர்பார்த்தேன் இளங்கோ.

**இளங் :** என் வாழ்வில் இப்படியொரு தோல்வியைச் சந்திப்பேனென்று நான் எதிர்பார்க்கவே இல்லையம்மா!

**கமல :** இதற்கெல்லாம் காரணம் செல்வரங்கமாகத்தானிருக்க வேண்டும்! இருக்கட்டும் "பிறர்க்கின்னு முற்பகல் செய்யின், தமக்கின்னு பிற்பகல் தாமே வரும்" என்ற குறளறம் என்றும் பொய்த்து விடாது!

(தாழம்பூ வருகிருள்)

**தாழம் :** அம்மா!

**கமல :** தாழம்பூ!

**தாழம் :** என் தோழி பரிமளாத்திற்குத் திருமணம் நடக்கப் போகிறதாம். மணவிழாவில் நமது "பதினாறும் பெறுக" நாடகத்தை நடத்தவேண்டுமென்று விரும்புகிருளம்மா !

**கமல :** நீ என்னம்மா சொன்ஞய் ?

**தாழம் :** அம்மாவைக் கேட்கவேண்டும் என்று சொல்லிவிட்டேன்.

**கமல :** அதுதான் சரி. இந்தச் சமயத்தில் நாடகம் வேண்டாம் தாழம்பூ.

**தாழம் :** ஏனம்மா ?

**கமல :** நான் எதிர்பார்த்தபடி உனது திருமண ஏற்பாடுகள் அமைய வில்லை. மூன்றும் பதினாறும் முட்டி மோதிக்கொண்டு குறுக்கே நிற்கின்றன !

**தாழம் :** விளங்கவில்லையே ?

**கமல :** உனக்கும் இளங்கோவுக்கும் பரமசிவனூர் மணம் முடிக்கிருராம். ஆனல் மூன்றல்ல, பதினறு பிள்ளைகள் பெறவேண்டு மென்பது நிபந்தனையாம்.

**தாழம் :** பலே ! அந்தப் பெரிய மனிதர்கள் நமது நாடகத்தைப் பார்த்த தன் விளைவா இது ? நிபந்தனை நம்மைப் பழி வாங்குவ தாகவல்லவா இருக்கிறது ?

**கமல :** இதை எப்படி நம்மால் ஒப்புக்கொள்ள முடியும் தாழம்பூ ?

**தாழம் :** அம்மா ! இப்பொழுதென்ன அவசரம் ? எனக்குத் திருமணமே வேண்டாம்.

**இளங் :** அப்படியானல் எனக்கும் திருமணம் வேண்டாம்.

**கமல :** (சிரித்து) முதலில் நமது இலட்சியம் மணக்கட்டும். பிறகு வேண்டாம் வேண்டாம் என்ருலும் திருமணம் தானுக நடக்கும்.

**இளங் :** நல்லது நான் வருகிறேனம்மா.

**கமல :** போய்வா இளங்கோ, கலங்க வேண்டாம், காலம் வரும், காத் திருப்போம்.

(போகிருன் இளங்கோ)

## காட்சி 13

**இடம் :** பரமசிவம் வீடு. **காலம் :** முற்பகல்.

(பரமசிவமும், செல்வரங்கமும் வீற்றிருக்கின்றனர்)

**செல்வ :** பரமசிவம் ! தன்னேட மகள் பதினறும் பெக்கறதுக்கு ஒப்பு குட்டாளா கமலவேணி ?

**பரம :** ஐயா ! அவ லட்சியவாதியாச்சே, எப்படிங்க ஒத்துக்குவா ?

**செல்வ !** அது தானே கேட்டேன். அந்த ராங்கிக்காரி ஒப்புக்கமாட்டான்னு எனக்குத் தெரியும். பிறகு, நம்ப சண்பகம்—இளங்கோ கல்யாணத்தை எப்ப வச்சிக்கலாம் ?

**பரம :** கொஞ்ச நாள் போகட்டுமே !

**செலவ :** பரமசிவம் ! நம்ப சம்பந்தம் கலக்கப்போறது ஊரு முழுக்கத் தெரிஞ்சு போச்சு ! கல்யாண விருந்து எப்போ எப்போன்னு கேக்கிறுங்க. என்னாலே சொல்லி முடியலே. சீக்கிரமா வைசசிடுவோம் முகூர்த்தத்தை. எப்படி ?

**பரம :** ஐயா ! இளங்கோ ஒரு தெளிவில்லாமெ இருக்கிறுன். அவனுக்குத் தக்கபடியா சொல்லி மனசை மாத்தணும்.

**செலவ :** அதுக்கு நான் ஏற்பாடு செய்யறேன்.

**பரம :** வேணுமுங்க. நானே செய்யறேன். ஒரு வாரத்திலே முடிவு சொல்றேன்.

**செல்வ :** நான் நம்பிக்கையோடு போகலாமா ?

**பரம :** ஆமாங்க ! நம்பிக்கை தானே மனித வாழ்வுக்கு முக்கியம் ?

**செல்வ :** நம்பிக்கைக்கு பங்கம் ஏற்பட்டா நான் மனிதனுகவே இருக்க மாட்டேன். அவ்வளவுதான், வர்றேன்.

(போகிருர், வேறு பக்கமிருந்து இளங்கோ வருகிருன். அதைக் கேட்ட வண்ணம்)

**இளங் :** என்னப்பா ! செல்வரங்கம் மிருகமாகப் போகிறேன் என்று மிரட்டுகிருர் ? எதற்கு இந்த மிரட்டல் ?

**பரம :** ஒண்ணுமில்லேடா தம்பி ! இந்த மாதக் கடைசிக்குள்ளே, வாங்கின கடன் பத்தாயிரமும் வேணுமாம்.

**இளங் :** அதைப்பற்றி கவலைப்படாதீர்கள். அறுவடை முடிந்துவிடும். தென்னந்தோப்பையும் குத்தகைக்குவிட்டு நான் தீர்க்கிறேன். அவரது கடனே !

**பரம :** அந்தத் தைரியம் எனக்கும் இருக்குதடா தம்பி.

**இளங் :** பிறகேனப்பா அஞ்சவேண்டும் ? அவருக்கு நாம் கடன்பட்டவர் களாயிருக்கலாம், அடிமைப்பட்டவர்களல்லவே.

(அப்பொழுது முத்தா ! முத்தா ! என்று அழைத்துக்கொண்டு எட்டு வயது சிறுவர் சுந்தரம் ஓடி வருகிருன்.)

**சுந்தர :** முத்தா ! முத்தா ! உம்... இந்த வீட்டிலே முத்தனைக் காணுமே ! (சிறுவனைக்கண்டு அஞ்சி நிற்கிருர் பரமசிவம். அவரைப் பார்த்ததும் வியப்பும் களிப்பும் கொள்கிருன் சிறுவன்)

**சுந்தர :** அப்பா !....அப்பா !....நீங்களா ?....நம்ப வீடா இது ? நமக்கு இவ்வளவு பெரிய வீடு இருக்குதாப்பா ?....அடேயப்பா ! எவ்வளவு நல்லாருக்குதே வீடு.

(பரமசிவமும், இளங்கோவனும் ஒருவரையொருவர் பார்த்து விழிக்கின்றனர். முத்தன் வருகிருன்)

**சுந்தர :** எம்ப்பா ! பேசமாட்டேங்கறிங்க ? முத்தா ! நீயும் வந்திட்டியா? ஒன்னைத் தேடிக்கிட்டுத்தான் வந்தேன். இங்கே இருக்கிற தாகச் சொன்னுங்க வந்து பார்த்தா அப்பவே இருக்காரு, ஆமா, அப்பா ஏன் எங்கிட்டே பேச மாட்டேங்குருரு ?

முத்தன் : எது பெரிய வம்பாப் போச்சே !

இளங் : முத்தா ! யார் இந்தச் சிறுவன் ?

முத்தன் : இவன் ஒரு அனாதைப் பயலுங்க. என் ஊட்லே வச்சு கஞ்சி ஊத்திகிட்டிருந்தேன். என்னைத் தேடிகிட்டு இங்கே வந்திட்டுது.

இளங் : என் தந்தையை அப்பா என்று அழைக்கிறானே ? என்ன காரணம் ?

முத்தன் : என் ஊட்டுக்கு எசமான் வந்திருந்தபோது காசு கொடுத்தாரு. என் மகனுட்டமே இருக்கறேன்னு சொன்னாருங்க. அதை வச்சிகிட்டு அப்பா அப்பாங்கிறான். சின்னப்பயதானுங்களே ?

சுந்தர : முத்தா ! அப்படின்னா இவுரு என்னோட சொந்த அப்பா இல்லியா ?

முத்தன் : ஒனக்கு அப்பா எதடா அனாதைப்பயலே ?

சுந்தர : எங்கம்மா இவுருதான் எங்கப்பான்னு சொன்னாங்களே. நீயும் சொன்னியே ? இவுரு எங்கப்பாவேதான்—நீ என்னை ஏமாத்தப் பார்க்கறே ! அப்பா ! அப்பா !....

(பரமசிவத்திடம் தாவுகிறான் அவர் உதறுகிறார்)

பரம : அட சனியனே ! யாரு பெத்த பிள்ளையடா நீ ? போடா ! போடா !

சுந்தர : நான் மாலதி பெத்த பிள்ளையப்பா ! ஒங்களோட அன்பு மகனப்பா ! அம்மா காய்ச்சல் வந்து கண்ணை மூடிக் கெடக்கறுப்பா ! அப்பா என்னை ஏன் இப்படிப் பார்க்கறிங்க ? கண்ணே சுந்தரம்னு எவ்வளவு பிரியமாப் பேசுவீங்களே ! ஏம்பா ! எம்மேலே இவ்வளவு வெறுப்பு ? நான் ஏதாச்சும் தப்பு பண்ணியிருந்தா மன்னிச்சிடுங்க அப்பா ! அப்பா !....அப்பா !....

(தந்தையின் காலில் விழுந்து பிடித்துக்கொள்கிறான் "அடச்சீ" என்று உதைத்துத் தள்ளுகிறார் பரமசிவம். அழுது குமைகிறான் சிறுவன்)

இளங் : அப்பா ! முத்தன் வீட்டிலே இந்தச் சிறுவனிடம் நீங்கள் அன்பு காட்டியதும், காசு கொடுத்ததும் பொய்யல்லவே ?

பரம : (தடுத்து) உம் ...வந்து ... நெசந்தாண்டா தம்பி !

இளங் : இந்தச் சிறுவனிடம் எனக்கென்னவோ ஒரு பற்றும், பாசமும் ஏற்படுகிறதப்பா ! பாவம் அனாதைப்பையன் ! கொஞ்ச நாளைக்கு இவன் என்னோடு இருக்கட்டுமப்பா !

பரம : இவன் எதுக்கடா உன்னோட ?

இளங் : அனாதைகளை ஆதரிப்பதில் தவறில்லையே ! அது வசதிபடைத்தவர்களின் கடமையப்பா !

பரம : என்னமோ செய். ஆனா என் வீட்லே இருக்கப்படாது இந்தச் சனியன்!

சுந்தர: (வருந்தி) அப்பா....அப்பா!......

இளங்: (அவனை அணைத்து) தம்பி! பேசாமலிரு. உன்னை நான் ஆதரிக்கிறேன். உன்னை என் தம்பி போல நடத்துவேன், கவலைப் படாதே! என்னோடு வா!

முத்தன்: நல்லதுங்க அப்படி வேணுமானு செய்யுங்க. (அவர்கள் போகின்றனர்)

பரம: (சினந்து) டாய் முத்தா! இந்தப் பயல் எப்படி வந்தான்? எதுக்கு வந்தான்? ஏன் வந்தான்?

முத்தன்: இது உங்களோட எளைய தாரம் மாலதியம்மாவைக் கேட்க வேண்டிய கேள்வி!

பரம: (சினந்து) ஆங்! என்னடா சொன்னே! மாலதி எனக்கு எளைய தாரமா? எளைய தாரமா?

முத்தன்: பதராதீங்க எசமான்! என்னைக்கிருந்தாலும் ஒரு நாள் இது அப்படித்தான் முடியும். எப்படியோ பய என்னைத் தேடிகிட்டு ஒங்க வீட்டுக்கே வந்துட்டான், சின்ன எசமானும் பார்த்திட்டாரு. அவுருக்கு எற்கெனவே இருந்த சந்தேகம் வலுத்துப் போச்சு. சின்னப்பயலும் எல்லாத்தையும் சொல்லிடப் போறான். எப்படியும் இனியும் விஷயத்தை மூடிவைக்க முடியாதுங்க, எசமான்! கௌரவமாக நடந்துக்க வேண்டியதுதான்.

பரம: அப்படின்னு, எனக்கு வைப்பாட்டியா வந்தவளை எளையதாரமா ஏத்துக்கச் சொல்றியாடா?

முத்தன்: நீங்க பெரியவங்க. அதை நீங்களாக கவுரவமா செய்யணும் எசமான்!

பரம: முடியாது! அவளை ஏதாவது பணங்காசு, கொடுத்துக் கழிச்சுப் போடுவேனே தவிர கட்டிய மனைவியா ஏத்துக்கவே முடியாது.

முத்தன்: கொழந்தைங்க இருக்குது எசமான்?

பரம: கொஞ்சம் அதிகமா பணம் கொடுக்கறேன் வாங்கிகிட்டுத் தொலையட்டும்!

முத்தன்: எசமான்! பணத்தை வச்சே எல்லா காரியத்தையும் சாதிக்கலாம்னு சொல்றவரு செல்வாங்கம். அந்த வழி நமக்கு வேணுமுங்க. நியாயம், நடத்தை, நீதி, நேர்மைகளைக் காப்பாத்தனுமுங்க!

பரம: அப்ப, நீதான் சுந்தரத்தை இங்கே வரச் சொன்னியா?

முத்தன்: ஐயோ எசமான்! இல்லவேயில்லே. சத்தியமா நான் சொல்லலே, காய்ச்சலுக்கு மருந்து வாங்க என்னைத் தேடி இவ்வளவு தூரம் வந்திருக்கிறான் எசமான்!

பரம: (குழம்பி) காய்ச்சல், அவளுக்கல்லடா; என்னோட கவுரவத்துக்கல்லவா காய்ச்சல் வந்திருக்குது! ஐயோ! பெருங்காய்ச்சல்!

(தலையில் கை வைக்கிறார்)

## காட்சி 14

இடம்: கமலவேணி வீடு காலம்: பிற்பகல்

(கமலவேணி ஒரு நாற்காலியில் உட்கார்ந்து திருக்குறள் படித்துக் கொண்டிருக்கிருள்)

கமல: (பாடுகிருள்)

"ஒத்ததறிவான் உயிர் வாழ்வான்; மற்றையான்
செத்தாருள் வைக்கப்படும்"

(இளங்கோவும், சுந்தரமும் வருகின்றனர்)

கமல: வா இளங்கோ! தம்பி யாரு?

இளங்: என்னுடைய தம்பியைப் போன்றவன்.

கமல: போன்றவன் என்ருல், உண்மையில் தம்பியல்ல என்பது பொருளா?

இளங்: இனித்தான் எதையும் ஆராய வேண்டும். பெயர் சுந்தரம்! என் தந்தையை அப்பன் என்கிருன். அவர் இவனை அனுதை என்கிருர். எனக்கொன்றும் விளங்கவில்லை.

கமல: தம்பி! உனக்கு அம்மா இருக்கிருர்களல்லவா?

சுந்தரம்: இருக்கருங்க. பேரு மாலதிங்க.

கமல: தாய் இருக்கும்போது குழந்தை எப்படி அனுதையாகும்?

சுந்தரம்: தாய் மட்டுமல்லம்மா. தகப்பனும் இருக்காருங்க. எங்க வீட்டுக்கு வர்றபோது காசு பணம் கொடுக்கருரு. கண்ணே மகனேன்னு பிரியமா பேசருரு. அவுங்க வீட்டுக்கு நான் போனதும் அனுதைப் பயலே போடா வெளியேங்கருரே!

கமல: இளங்கோ! இதென்ன வேடிக்கை?

இளங்: இதிலே ஏதோ ஒரு மர்மம் இருக்கிறது. என் தாய் இறந்து பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன. இரண்டாம் தாரம் செய்து கொள்ளும் அறிவிலியல்ல நான் என்று எல்லோரிடமும் சொல்லுபவர். ஆனுல் வாரத்தில் ஓரிரு நாட்கள் வீட்டில் இருக்கமாட்டார்.

கமல: எங்கே போவார்?

இளங்: கேட்டால் தோட்டத்துக்கு போவதாகச் சொல்லுவார்.

சுந்தர: வாரத்திலே இரண்டொரு நாள்தான் அப்பா எங்க வீட்டிலேவந்து தங்குவாரு.

கமல: என்ன இளங்கோ?

இளங்: முத்தன் வாரத்திலே-ஒரு முறை கூடையைக் கொண்டு போய் வீட்டுச் சாமான்கள் யாருக்கோ வாங்கிக் கொடுத்து விட்டு வருவான்.

சுந்தர: அது எங்க வீட்டுக்குத்தான் அம்மாகிட்டே கொண்டாந்து கொடுப்பான், சாப்பாட்டுச் சாமான்.

கமல: என்ன இளங்கோ?

இளங்: சென்ற கிழமை முத்தன் அப்பாவிடம் பேசும்பொழுது அவரது தவறு பற்றி இடித்துப் பேசினுன். "மாலதியைக் கேட்டால்ல தெரியும். அந்தத் தவறு" என்ருன். கடுமையாக வைதார் அப்பா.

சுந்தர : மாலதிதான் எங்களோட அம்மா.

கமல : என்ன இளங்கோ! புரிகிறதா உனக்கு? இது பயங்கரக் காதலல்ல. உன் தந்தையாரின் இரகசியக் காதல். பரிதாபத்திற்குரிய ஒரு பேசும் கதை.

சுந்தர : அம்மா! அப்பா ரகசியமா எங்க வூட்டுக்கு வந்து, அம்மாகிட்டே பேசிகிட்டு இருப்பாரு ரகசியமாப் போயிடுவாரு.

கமல : ஆமாம், முத்தன் இருப்பது எங்கே?

சுந்தர : எங்களுக்குக் காவலா எங்க வீட்டிலேயேதான் இருக்கிறது. படுத் துக்கறது. என்னைக் காப்பாத்துற முத்தனும், அப்பாவுமே என்னை அனாதைப் பயல்னு சொல்லிட்டா, அப்புறம் நானும் என்னோட தங்கையும் எப்படியம்மா பொழைக்கிறது, எப்படியம்மா படிக்கிறது? இது எங்கம்மாவுக்குத் தெரிஞ்சா அவுங்க மனசு எப்படியம்மா இருக்கும்?

கமல : சுந்தரம்! உங்க வீடு எங்கேயப்பா இருக்கிறது?

சுந்தர : ஊருக் கோடியிலே கொண்டலாம்பட்டியிலே இருக்குதுங்க.

(தாழம்பூ வருகிருள்)

தாழம் : யாரும்மா இந்தப் பையன்?

கமல : இளங்கோவின் தம்பி.

தாழம் : இளங்கோவுக்குத் தம்பி ஒருவன் உண்டா?

இளங் : அம்மா இப்படியாக உறுதி செய்கிருங்கள்.

கமல : இது எற்கெனவே உறுதியாகிவிட்ட விஷயம். இப்பொழுது நீ செய்ய வேண்டியதெல்லாம் இளங்கோ! இந்தப் பைய னுக்கும், இவனைப் பெற்ற உன் அப்பாவிச் சிற்றன்னை மாலதிக்கும், உரிமையும் நீதியும் வழங்க வேண்டும். இது உன்னுடைய கடமை.

சுந்தர : எங்கம்மா காய்ச்சல் வந்து கண்ணை மூடிகிட்டு கெடக்கருங்க, அண்ணு.

இளங் : அம்மா! நான் ஒன்று நினைக்கிறேன்.

கமல : என்ன இளங்கோ?

இளங் : தம்பி சுந்தரத்தோட நாம் எல்லோரும் அவர்கள் வீட்டுக்குப் போவோம். மாலதியைக் கண்டு எல்லாவற்றையும் விசாரித் தறிவோம். பின்னர் உறுதியாக அவர்களுக்கு நீதி வழங்கு வோம். நான் பொறுப்பேற்கிறேன்.

கமல : நிரம்ப நல்லது. செய்யத்தக்கது அதுதான்.

தாழம் : நானும் உங்களோடு வர வேண்டுமா?

இளங் : நாம் எல்லோரும் என்று சொன்னேனே! நீ நம்மைச் சார்ந்தவள் இல்லையா? இதிலே நம்முடைய விவகாரமும் இருக்கிறது தாழம்பூ! புறப்படு.

தாழம் : இதோ, நான் தயார்.

இளங் : வாருங்கள்! வாருங்கள்!

(எல்லோரும் போகின்றனர்)

## காட்சி 15

இடம்: தெரு. காலம்: மாலை.

(கைப்பையில் ஏதோ சாமான்களோடு வருகிறான் முத்தன். பின்னால் வந்த பிரபு செல்வரங்கம், முத்தா! முத்தா என்று கூப்பிடுகிறார்).

முத்தன்: (நின்று திரும்பி) ஏனங்க எசமான்?

செல்வ: முத்தா! ஒன்னைத் தனியா சந்திச்சு பேசணும்னு ரொம்ப நாளா நெனைச்சேன்; அது இன்னிக்குத்தான் முடிஞ்சுது பாத்துக்க.

முத்தன்: நீங்க ரொம்பப் பெரியவங்க; இந்த ஏழை வேலைக்காரங்கிட்டே அப்படி என்னங்க பேசறதுக்கு இருக்கப் போவுது?

செல்வ: இருக்குதுடா முத்தா! இருக்குது. நீ சாதாரண வேலைக்காரனல்ல; பரமசிவத்தோட குடும்பத்திலே ஒனக்கு இருக்கிற மதிப்பு எனக்கு நல்லாத் தெரியும்.

முத்தன்: அப்படிங்களா? சந்தோஷமுங்க அதுலே கொறைவு இல்லாமெ இருந்தாப் போதுமுங்க.

(மடியிலிருந்து ஒரு மடித்த கவரை எடுத்து முத்தனிடம் கொடுக்கிறார்)

செல்வ: கொறைவு இல்லே. இதை வச்சுக்கோ. என் மகளோட கல்யாணத்தை எப்படியும் நீதான் முடிச்சு வைக்கணும்.

முத்தன்: (வாங்கிக்கொண்டு) என்னங்க இது கவர்லே?

செல்வ: ஐநூறு ரூபா, போதுமா? இன்னும் வேணுமா?

முத்தன்: ஆமாங்க எசமான். கல்யாணத்துக்கு ஏன் இப்படி அவசரப் படறீங்க?

செல்வ: முத்தா! என்னோட குடும்பம் பெரிசு. பிக்கல் பிடுங்கள் ரொம்ப அதிகம். தாங்க முடியலேடா.

முத்தன்: ஒங்களுக்கு எத்தனை புள்ளைங்க எசமான்?

செல்வ: ஆண் அஞ்சு, பெண் எட்டு, ஒம்பது உருப்படிக்குக் கல்யாணம் எப்படியோ முடிச்சுபோட்டேன்.

முத்தன்: நீங்க நெசம்மாவே பெரியவங்கதான் எசமான்.

செல்வ: எப்படியிருந்தாலும் தன்னோட மகளை ஒரு நல்ல குடும்பத்திலே வாழ வைக்கணும்னுதானே பெத்தவங்க நெனைக்கணும்?

முத்தன்: ஆமா. எங்க எசமான் குடும்பத்தைவிட நல்ல குடும்பமே கெடைக்கலீங்களா ஒங்களுக்கு?

செல்வ: இதுபோல எல்லா அம்சமும் பொருந்தின குடும்பம் கெடைக்கலே முத்தா! பரமசிவம் குடும்பத்துக்கு நிலபுலம் இருக்குது. சொத்துபத்தும் குறைவில்லே, ஒருத்தனுக்கு ஒரே மகன். அதிலும் பி. ஏ. படிக்கிறவன் இளங்கோ. அண்ணன், தம்பி, அக்கா, தங்கை யாருமில்லாத சின்ன குடும்பம்! எம்மகள் ஒரு தொல்லையில்லாமெ நிம்மதியா சொகப்படுவா! சொத்துக்களும் பங்கு பாகம்னு பிரியாது. நல்லாப் பொழைக்கலாம் பாரு. அதுக்குத்தான் நான் அவசரப் படறேன். வேறு எதுக்கு?

முத்தன்: நீங்க இப்படிப் பேசறது நியாயமில்லே எசமான்.

**செல்வ :** என்னோட பேச்சிலே எந்த அநியாயத்தையடா கண்டே ?

**முத்தன் :** ஒவ்வொருத்தரும் பதினாறு கொழந்தைகளைப் பெத்துப் பெரிய குடும்பமா வாழணும்கிறது ஒங்களோட கொள்கை இல்லீங்களா ?

**செல்வ :** ஆமாம்.

**முத்தன் :** அதுக்காக, கல்லூரி விழாவுலே கலவரம் பண்ணினீங்க. தாழம்பூவோட கல்யாணப் பேச்சிலே, அதை ஒரு நிபந்தனையாவே போடவச்சீங்க. பெரிய குடும்பத்தை விரும்பற நீங்க, ஒங்க மகளை பெரிய குடும்பத்திலே கொடுத்து வாழவைக்கறது தானுங்களே நியாயம் ?

**செல்வ :** ஆமா; ஒத்துக்கறேன்.

**முத்தன் :** ஒங்க மகளுக்கு மட்டும் சின்ன குடும்பத்தைத் தேடறது கொள்கைக்கு விரோதமில்லியா ? மத்தவங்க எப்படியோ நாசமாவுட்டும், நம்ப மகள் நல்லாப் பொழைக்கணும்கிற சுயநலந்தானே இதுக்குக் காரணம் ?

**செல்வ :** (வருந்தி) முத்தா ! நான் வெளியே எப்படிப் பேசினாலும் எவ்வளவுதான் பணக்காரனாக இருந்தாலும், அளவுக்கு மேலே புள்ளைகுட்டிகளைப் பெத்துவிட்டு அதனாலே நான் படற வேதனை இருக்குதே; அது நரக வேதனைடா முத்தா ! நரக வேதனை.

**முத்தன் :** அப்படீன்னா, நீங்க யோக்கியரா இருந்தா அதிகமா பெத்துகிட்டு அவஸ்தைப்படாதீங்கன்னு மத்தவங்களுக்கு சொல்லணும். உற்பத்தியைப் பெருகவச்சு ஊரயல்ல கெடுக்கறீங்க ! பணக்காரங்க நெலையே இதுவானா, ஏழைகளோட கதி என்ன ஆகிறது ?

**செல்வ :** முத்தா ! நீ என்னைத் திட்டு, வையி, பேசு, கேட்டுக்கறேன். எப்படியாவது எம்மகளோட கல்யாணத்தை மாத்திரம் முடிச்சுப்போடு ! எனக்கு அதுதான் வேணும்.

**முத்தன் :** அது சரி, எது எப்படிப் போனாலும் போவட்டும். ஒங்களுக்கு அதுதான் வேணும். ஆனா, சின்ன எசமானோட முடிவு என்ன தெரியமுங்களா ?

**செல்வ :** என்னடா அவன் முடிவு ?

**முத்தன் :** என்ன சொன்னாலும் சரி, எதைக் கொடுத்தாலும் சரி. ஒங்க மகள் சண்பகத்தை மட்டும் கல்யாணம் பண்ணிக்கப் போறதில்லையாம் !

**செல்வ :** ஆங் ! அப்படியா சொல்லிப்போட்டான் ? உம்....(யோசித்த வண்ணம் உலாவி) முத்தா ! அது போவட்டும். மனைவியில்லாத பரமசிவமாவது ரெண்டாந்தாரமா என் மகளைக் கட்டிக்கட்டும். அதுக்காவது ஏற்பாடு செய்யடா ! எப்படியும் அவள் இந்தக் குடும்பத்திலே வாழ்க்கைப் பட்டுட்டாபோதும்.

**முத்தன் :** அதுக்கும் வழியில்லீங்களே.

**செல்வ :** ஏண்டா முத்தா ? மனமிருந்தா மார்க்கம் இருக்கும்டா கொஞ்சம் பாருடா !

**முத்தன் :** எசமானுக்கு ஏற்கனவே ரெண்டாந்தாரம் ஆயிட்டுதுங்க.

**செல்வ :** அப்படியா ! யாருடா அவ ? கல்யாணம் எப்ப நடந்தது ? யாருக்குந் தெரியாதே !

முத்தன் : அது ரகசியமாகவே நடந்து போச்சுங்க.

செல்வ : இதென்னடா அநியாயம்? நான் ரெண்டாந்தாரமும் கட்டிக்கலே; வைப்பாட்டியும் வச்சுக்கலே. பரிசுத்தமான தியாகீன்னு பறையடிச்சானே பரமசிவம்! இவ்வளவு தானு அவனோட சங்கதியும் ?

முத்தன் : எசமான்! நான் ஒண்ணு சொல்றேன் கேக்கறீங்களா ?

செல்வ : சொல்லு முத்தா! சொல்லுடா கேக்கறேன்.

முத்தன் : எங்க எசமான் மீனவி இருக்கறவரு; சின்ன எசமானே விரும்பாதவரு. வயதிலும் எளியவரா, படிச்சவரா, அழகானவரா ஒங்க மகளை விரும்பரவரா ஒருத்தரு கெடைச்சா கல்யாணத்தை முடிச்சிடலாமுங்களா ?

செல்வ : எனக்குத் தெரிய அப்படி யாருமில்லியேடா முத்தா.

முத்தன் : இருக்கிறுங்க எசமான்! எனக்குத் தெரியும். நான் சொல்லட்டுமா ?

செல்வ : சொல்லடா பார்ப்போம்.

முத்தன் : ஒங்க எதுத்தவூட்டு ஏகாம்பரம் மகன் குப்புசாமிக்கு என்னங்க கொறைச்சல்.

செல்வ : (சினந்து) ஆங்! அந்த கதி கெட்டவன் மகனுக்கா என்னோட மகளைக் கொடுக்கச் சொல்றே ? முத்தா என்னோட அந்தஸ்து என்ன ?

மலைக்கும் மடுவுக்குமா எனை வைக்கறே ? மனசாலே நெனைக்க லாமா இதை? நெனைக்கலாமா? வாயாலே சொல்லிட்டியேடா வக்கத்தவனே ? தூ! நாயே! கழுவுடா வாயை!

முத்தன் : ஆமாங்க எசமான்! என் வாயை மட்டுமல்ல; கையையும் கழுவிக்கிறேன். தோ! இதை வையுங்க.

(நோட்டுக் கவரைக் கொடுத்துவிட்டு வேகமாகப் போகிறுன்.)

செல்வ : என்ன திமிரு இவனுக்கு. கலப்பு மணமில்லே பண்ணச் சொல்றுன். இவனுங்களைப் பார்க்கறேன் ஒரு கை.

(வேகமாகப் போகிறுர்.)

## காட்சி 16

இடம் : பரமசிவம் வீடு. காலம் : பிற்பகல்.

(பரமசிவமும், செல்வரங்கமும் இருக்கின்றனர்.)

பரம : ஐயா! கல்யாணம் ஆயிரங்காலத்துப் பயிரு. ஆலோசனை பண்ணி, பொறுத்து செய்யறது தான் நல்லதுங்க.

செல்வ : பரமசிவம்! என்னோட நெலைமையை நீ கவனிக்கணும். நாம் சம்பந்தம் கலக்கப்போறது இந்த சேலத்துக்கு மட்டுமல்ல; சென்னைப் பட்டணம் வரைக்கும் எட்டிப் போச்சு. எல்லோரும் கல்யாணம் எப்போ எப்போன்னு கேக்கருங்க. இனியும் காலதாமதம் ஆச்சுன்னு அது எனக்குப் பெரிய கேவலம். அதனுலே கல்யாணத்தை இந்த மாசத்திலேயே முடிச்சாக ணும். சீதனப் பணம் ஒரு லட்சமும் தயார் பண்ணிட்டேன். கல்யாணச் செலவு என்னோட சேர்ந்தது. இன்னுமென்ன வேணும் ?

**பரம :** கல்யாணம் பண்ணிக்கிறவன் சம்மதிக்க வேணுங்களே !

**செல்வ :** பெத்த பிள்ளையைச் சம்மதிக்க வைக்கிறது தகப்பனோட கடமை யல்லவா ?

**பரம :** அதே சமயத்திலே, கல்யாணத்துக்கா பலாத்காரத்தைப் பிரயோகம் பண்றதும், மடமையாச்சுங்களே !

**செல்வ :** பரமசிவம் ! நான் பிடிவாதக்காரன். ஒனக்குத் தெரியும். எப்படியும் என் எண்ணம் நிறைவேறியே தீரணும். என் மகளை உன் மகன் கல்யாணம் பண்ணிக்கலேன்னு ஒன்னோட சாயம் வெளுத்துப் போகும். ஒங்குடும்பத்தோட அந்தரங்க ரகசியமெல்லாம் வெளிப்படுத்தி, உன்னை முச்சந்தியிலே நிறுத்துவேன், மானபங்கப்படுத்துவேன். காரித் துப்புவாங்க ஊராரு.

**பரம :** (அஞ்சி) என்ன ? எங்குடும்பத்தோட அந்தரங்க ரகசியமா ? எதைச் சொல்றீங்க? அப்படி எங்கிட்டே எதுவுமே கிடையாது!

**செல்வ :** எல்லாம் எனக்குத் தெரியும்ப்பா ? நான் கடன் வாங்காத பணக்காரன்னு பகட்டுப் பேசினே; எங்கிட்டே பத்தாயிரம் கடன் பட்டிருக்கிறே ! ஒழுக்கத்திலே உயர்ந்தவன் தியாகின்னு பீத்திக்கிட்டே ! ரகசியத்திலே வைப்பாட்டியை வச்சுப் பிள்ளைகளைப் பெத்திருக்கிறே ! இதெல்லாம் வெளியே தெரிஞ்சா, ஒன்னோட கவுரவம் என்ன ஆகும் ? நெனச்சுப் பாத்தியா ?

**பரம :** (அஞ்சி) அங் ! இது பயங்கரமான நடவடிக்கை ! ஐயா ! செல்வரங்கம் ! நான் மானத்துக்கும் மரியாதைக்கும் பயப்படறவன்; தயவு செய்து என்னோட இந்தத் தவறுகளை வெளிப்படுத்தி மானபங்கம் செய்யாதீங்க. இதைச் செய்தா வது ஒம்மோட மகளை வாழவைக்கணும்னு நெனைக்காதீங்க! அது பெறுங்குற்றமையா ! கொடுமை ஐயா ! வேணும்.

**செல்வ :** ஐயா ! பரமசிவம் ! குற்றமோ கொடுமையோ; எனக்குத் தெரியாது. என்னோட எண்ணம நிறைவேறலேன்னு, அதுக்காக நான் எதையும் செய்யப் பின்வாங்கமாட்டேன் ! ஜாக்கிரதை.

**பரம :** ஐயா ! இளங்கோவுக்கு உங்கள் மகளை பிடிக்கலே. நான் கெஞ்சிக் கேட்டுக்கிறேன். அதுக்காக என்னை அவமானப் படுத்திடாதீங்க. என் கவுரவத்தை தொலேச்சிடாதீங்க ! ஒங்க காலே வேணுனும் கட்டிக்கறேன். தயவு பண்ணி என்னை மன்னிச்சிடுங்க. என்னை மன்னிச்சிடுங்க செல்வரங்கம் !

(செல்வரங்கத்தின் காலில் விழுகிறார். "அப்பா ! அப்பா !" என்று கூவிய வண்ணம இளங்கோ வருகிறான். அவன பின்னால் கமலவேணி, தாழம்பூ, மாலதி, சிறுவன் சுந்தரம் ஆகியோர் வருகின்றனர்.)

**செல்வ :** முடியாது ! மானத்தோட வாழணுமானு கல்யாணத்தை நடத்தி வையி, மானம் மரியாதை கெட்டு மந்தையிலே நிக்கணுமானு மறுத்துப் பேசு.

**பரம :** ஐயயோ ! என்னைச் சித்திரவதைச் செய்யாதிங்கய்யா ! நான் ஊராருக்கு பயந்து பொழைக்கிறவனய்யா ! ஐயா !

**இளங் :** அப்பா, இதுவென்ன அலங்கோலம் ? ஒரு வஞ்சக நரியின் காலில் நீங்ள் எதற்காக விழவேண்டும் ? அப்படி யென்ன நேர்ந்துவிட்டது உங்களுக்கு ? என்ன குற்றம் செய்தீர்கள் ?

**பரம :** தம்பி ! இளங்கோ ! இவர் என்னை பயமுறுத்துருரடா !

**இளங் :** எதற்காக, எதைக்காட்டி பயமுறுத்துகிருர் ?

**பரம :** (அஞ்சி) வந்து....வந்து....நான் என்னடா சொல்லட்டும் ?.. ......எப்படியடா சொல்லட்டும் ?......

**செல்வ :** நான் சொல்லுகிறேன் ! இளங்கோ ! நீ இந்தப் பெண் பேய்களைவிட்டு விலகி வந்து, என்னுேட மகளை மணந்து கொள்ளணும் ! இல்லேன்னு என் கடனுக்காக உங்களை கோர்ட்டிலே நிறுத்துவேன் ! வெளியிலே யோக்கியன் போலப் பேசிக்கிட்டு, ஒங்கப்பன் ரகசியத்திலே வைப்பாட்டியை வச்சு, பிள்ளைகளைப் பெத்துக்கிட்டிருக்கிருன். அதை ஊரறியவச்சு, மானத்தைக் கெடுப்பேன். ஒங்க குடும்ப கௌரவத்தையே காத்திலே பறக்க விடுவேன்.

**இளங் :** இப்படிச் சொல்லி என் தந்தையை பயமுறுத்திவிட்டீர் ! என்னை ஏய்க்க முடியாது ! உமது எண்ணம் ஒருக்காலும் கைகூடப்போவதில்லை.

**செல்வ :** என் பிடியிலிருந்து நீங்க ரெண்டுபேருமே தப்பமுடியாது. சமூகத்திலே மரியாதை வேணுமானு என் விருப்பப்படி நடந்தே ஆகணும்.

**இளங் :** இது வெறும் மிரட்டல். நாங்கள் தீராத கடன்காரருமல்ல, ஒழுக்கம் கெட்டோருமல்ல. உம்முடைய கடன் ஒரு வாரத்திற்குள் தீர்க்கப்படும். என் தந்தையின் ஒழுக்கக் கேடுபற்றிச் சொன்னீரே ! அந்தப் பிரச்சினையும் இன்ருேடு தீர்ந்துவிட்டது.

**செல்வ :** எப்படித் தீர்க்க முடியும் அதை ? எத்தனை வருஷத்திய கள்ளக் காதல் தெரியுமா ?

**இளங் :** இதோ பாரும் (தந்தையிடம்) தந்தையே ! நீங்கள் விரும்பி யேற்று, பரிபாலித்துப் பாதுகாத்து, முத்தனின் உதவி பெற்று மாலதியம்மாவோடு இரகசிய வாழ்வு நடத்தினீர்கள் இது உண்மை தானே ?

**பரம :** (தடுமாறி) உம்....உண்மைதான். உண்மைதான்.

**இளங் :** அது வெளியே தெரிந்தால் கேவலம், என்று மறைத்ததும், அந்தப் பிள்ளைகள் உரிமை கேட்டால் என்ன செய்வது என்று அஞ்சியதும் தவறுகள்தானே இல்லையா ?

**பரம :** உம்....அது....தவறுதான் இளங்கோ.

**இளங் :** அந்தத் தவறுகளுக்குப் பரிகாரமாக இதோ மாலதியம்மாவை என் சிற்றன்னையாகவும், இவர்கள் பெற்ற குழந்தைகளை என் உடன் பிறப்புகளாகவும் ஏற்றுக்கொள்ளுங்கள். இனி நாம் ஒரே குடும்பமாகச் சேர்ந்து வாழ்வோம்.

**பரம :** இளங்கோ ! நான் ஏற்றுக்கொண்டாலும்....சமூகம் இதை ஏற்குமா தம்பி ?

**இளங் :** ஏனப்பா ஏற்காது ! தாமிழந்தவர் இளயதாரரம் மணக்கிருர். கட்டுப்பாடாக வாழ்கிருர். அதைத்தான் நீங்களும் செய்தீர்கள். அச்சம், வெட்கம் காரணமாக மறைத்தீர்கள். இப்பொழுது துணிந்து வெளிப்படையாக ஏற்கிறீர்கள் ! இதிலென்ன குற்றம் ? சமூகத்துக்கு இதிலென்ன கேடு ?

**பரம :** குத்தமில்லேன்னு, மனப்பூர்வமாக ஏத்துக்கிறேன், இளங்கோ.

**இளங்** : பெரியவரே ! போதுமா? இன்னும் வேணுமா?

**கமல** : இன்னொரு நல்ல காரியமும் செய்திருக்கிறார் இளங்கோ உன் தந்தை ! அதிகமாகப் பெறக்கூடாதென்பதற்காக, ஆணொன்றும் பெண்ணொன்றுமாக இரண்டு குழந்தைகள் பிறந்ததும், மாலதிக்குக் குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சை செய்துவிட்டார்.

**இளங்** அஃகா ! குடும்பக்கட்டுப்பாட்டின் அவசியத்தை என் தந்தையாரே உணர்ந்திருக்கிறாரா?

**கமல** : உணர்ந்தது மட்டுமல்ல ; செய்துமிருக்கிறார் !

**இளங்** : அப்பா ! இப்படிப்பட்ட நல்லவராகிய நீங்களா தாழம்பூ பதினாறு பெறவேண்டும் என்று நிபந்தனை போட்டீர்கள் ?

**பரம** : இளங்கோ? அது உங்களோட கல்யாணத்தை நிறுத்த இந்தப் பெரிய மனிதர் போட்ட திட்டமடா ! பின்னாலே தான் இந்தச் சதி எனக்குப் புரிஞ்சிது ! முத்தன் எல்லாத்தையும் சொன்னான். (முத்தன் வருகிறான்)

**முத்தன்** : இன்னொரு சங்கதி தெருயுமுங்களா?

**இளங்** ; என்ன முத்தா?

**முத்தன்** : பதினாறு பெறவேணும்னு பிறத்தியாருக்குச் சொல்லிக் கொடுத்த செல்வரங்கம், "பிள்ளைகள் அதிகமில்லாத நல்ல குடும்பம், அதுக்காகத்தான் என் மகளை இளங்கோவுக்குக் கொடுக்க விரும்புகிறேன் ; அவரு கட்டிக்கலேன்னா, பெரிய எசமானாவது கட்டிக்கிட்டும், ஏற்பாடு செய்யுடான்னு சொன்னாருங்க ! அதுக்காக ஐநூறு ரூபா லஞ்சமும் கொடுக்க வந்தாருங்க.

**இளங்** : சே ! என்ன கேவலமிது? பெரியவரே ! சமுதாயத்தின் மேல் தளத்தில் இருப்பவர்கள் நீங்கள். சமுதாய நல் வாழ்வுக்கும், நாட்டின் பொதுநலத்திற்கும் பொறுப்பேற்க வேண்டியவர்கள் நீங்களல்லவோ?

(முத்தன் போகிறான்)

**செல்வ** . ஆமாம், நீ சொன்னாலும், சொல்லலேன்னாலும் என்னைப் போன்றவர்களாலேதான் சமுதாயத்தை முன்னேற்ற முடியும்?

**இளங்** அப்படித்தான் நானும் கருதியிருந்தேன். ஆனால் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் உங்கள் ஈனத்தனம் இப்பொழுதல்லவா தெரிகிறது ! மகளின் வாழ்வுக்காக எதிர்பார்ப்பது சிறிய குடும்பம், மற்றவரின் தாழ்வுக்காகப் பெறச் சொல்வது பதினாறு பிள்ளைகளை !

**செல்வ** : போடா போ ! இந்தக் குற்றத்தை உங்கப்பனுந்தான் செஞ்சாரு.

**பரம** : ஆம். தவறு செய்தேன். உம்மால். உணர்ந்தேன் ; திருந்திவிட்டேன். இனி உம்மிடம் அஞ்சமாட்டேன், அது பேரில் நிபந்தனை போடவும் மாட்டேன்.

**கமல** : செய்த தவறை உணர்ந்து திருந்துபவர் மனிதரில் பெரியவர் ; செய்த தவறுகளை யுணர்ந்தும் அதனையே செய்து கொண்டு வருபவர் கயவரில் பெரியவர் !

**பரம** : இது உண்மை. கமலவேணியின் பேச்சு ஒரு பொன்மொழி !

சுந்தர: அப்பா! இனிமே நீங்க எங்கப்பா தானே? இனிமே என்னே அனுதைன்னு சொல்லி வெரட்டமாட்டீங்களே?

பரம: (வருந்தி) வாடா மகனே! சுந்தரம்! (கட்டியணைத்து) உன்னைப் பெத்து வளர்க்கும் அப்பாதாண்டா நான். என் அச்சமும் அறியாமையும் உன்னை அனுதைன்னு சொல்லவச்சுதடா! இளங்கோ நம்மை ஒரு இலட்சியக் குடும்பமா சேத்து வச்சுட்டாண்டா மகனே!

(அணைத்துக்கொள்ள கையில் மாலைகளோடு, முத்தன் ஓடி வருகிருன்.)

முத்தன்: போச்சு! போச்சு! எல்லாம் போச்சு! அநியாயமா போச்சு!

இளங்: என்னப்பா போச்சு? எங்கே போச்சு?

முத்தன்: சேலம் பிரபு செல்வரங்கத்தோட குடும்பப் பெருமை ஆடிக்காத்து எச்சிலையாய் பறந்து போச்சு!

செல்வ: டாய்! அயோக்கியப் பயலே! என்னடா ஒளர்றே? என்னுடைய குடும்பப் பெருமை எப்பவும் கொடிகட்டிப் பறக்குமடா!

முத்தன்: பறக்குதுங்க! கட்டுப்பாடில்லாத, குடும்பத்துக்குக் கெடைக்க வேண்டியது ஒங்களோட குடும்பத்துக்கும் கெடச்சிட்டுதுங்க.

செல்வ: கபோதிப்பயலே! என்னடா கதையளக்கிறே?

முத்தன்: இது நடந்த கதைங்க. எதுத்த வீட்டுக் குப்புசாமியைக் காதலிச்ச ஒங்களோட எழாவது மகள் சண்பகம் இந்தக் கல்யாண நிர்ப்பந்தம் பிடிக்காமெ கண்ணியமா காதலனோட வீட்டை விட்டு வெளியேறிட்டாங்க. தந்தைக்கு மகள் எழுதி வச்ச கடுதாசியோட தோ! வெளியே வந்து காத்திருக்கிருன் ஒங்க வீட்டு சமையல்காரன்! போங்க! போய்ப் பாருங்க!

செல்வ: ஆங்! ஐயோ! ஐயோ!

(வயிற்றில் அடித்துக் கொண்டு ஓடுகிருர் செல்வரங்கம்)

கமல: குடும்பப் பெருமை வீட்டோடு கொடிகட்டிப் பறக்கவில்லை. வெளியே கொடியைத் தூக்கிக்கொண்டும் பறக்கிறது போலும்.

முத்த: குட்டுப்பட்டாலும் செல்வரங்கம் மோதிரக் கையாலேதான் குட்டுப் பட்டிருக்காருங்க. குப்புசாமி படிச்ச பையனுங்க; நல்ல பையன். ஒழுக்கமுள்ளவன். அந்தக் காதல் கலப்பு மணத் தம்பதிகளுக்கு நம்ப வாழ்த்துச் சொல்லணுமுங்க.

தாழம்: ஆனல், பதினறும் பெறச் சொல்லி மட்டும் யாரும் வாழ்த்த வேண்டாம்.

கமல: கட்டுப்பாடாக மூன்று பெற்று கண்ணியமாக வாழட்டும். அதுதான் சிவப்பு முக்கோணச் சிறப்பு.

பரம: கமலவேணியம்மாள் என்னை மன்னிக்கணும். போலி கவுரவத்திற்கும், வறட்டு ஜம்பத்திற்கும் அடிமையாய்க் கிடந்த எனக்கு நல்ல பாடம் கெடைச்சிட்டுது. சின்ன குடும்பத்திலேதான் ஒழுக்கமும் கட்டுப்பாடும் உயர்வான நடத்தையும் இருக்க முடியும்கிறதை நல்லாத் தெரிஞ்சுக்கிட்டேன்.

கமல: மிக்க மகிழ்ச்சி! "பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் தத்தம் கருமமே" கட்டளைக்கல்" என்ருர் வள்ளுவர். அந்த உரைகல் நீங்கள் பத்தரை மாற்றுத்தங்கம் என்பதைத் தெளிவாகக் காட்டிவிட்டது.

முத்தன் : எசமான்! சின்ன எசமானும், தாழம்பூவும் கல்யாணம் பண்ணிக்கிறதிலே, இன்னமும் தடை ஏதாச்சும் உண்டுங்களா?

பரம : ஏதும் கிடையாது, முத்தா! கல்யாணத்துக்கு கமலவேணியம்மா போட்ட குடும்பக் கட்டுப்பாடு நிபந்தனைகளை அப்படியே மனப்பூர்வமா ஒப்புக்கிறேன். கல்யாணம் நடக்கட்டும்.

முத்தன் : அம்மா! ஒங்களுக்கு ஏதாச்சும் ஆட்சேபணையுண்டா?

கமல : என் செல்வமகள் தான் விரும்பிய காதலனைப் பெறுகிறாள். குடும்பநல வாழ்வில் நான் கொண்ட கொள்கை வெற்றி பெறுகிறது. திருந்திய தீரமுள்ள ஒரு நல்ல சம்பந்தியை நான் பெறுகிறேன். இதில் என்னைக் காட்டிலும் அதிகமாக மகிழ்வோர் யாருமிருக்க முடியாது. புதுவாழ்வு பெறுகின்ற மாலதியின் கையால் இந்த மணவினை நடைபெறட்டும்.

முத்தன் : ஆஃகா! அதுதான் பொருத்தம். அப்படியே நடக்கட்டும்.
(முத்தன் மாலைகளை பரமசிவத்திடம் கொடுக்கிறான். பெற்று அவர் மாலதியிடம் கொடுக்கிறார். முதலில் அவரது பாதங்களில் வணங்கிப் பின்னர் மாலைகளைப் பெற்று இளங்கோவிடமும், தாழம்பூவிடமும் கொடுக்கிறாள் மாலதி. அவர்கள் மாலையை மாற்றிக் கொள்கின்றனர்).

கமல : பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க!

பரம : பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க!

முத்தன் : என்ன? இல்லே! இல்லே! பதினாறு பெருமைகள். பதினாறு பேறுகள்!

(எல்லோரும் வாழ்த்துகின்றனர். கமலவேணியும், இளங்கோவும் பாடுகின்றனர்).

கமல : அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாம்
அளவோடு பெற்று அறிவோடு வாழ்க

இளங் : தெளிவுக்கு எங்கள் வாழ்விது கண்டீர்
திட்டமில்லாமலே பெற்றிட வேண்டாம்

இருவரும் : வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ் நிலம்
வாழிய தமிழர்கள் வாழியவே
வாழ்வு வளம்பெற குடும்பநலம் பெறும்
வகையினை ஊர்ந்து வாழியவே!

முற்றும்.

காமராசர் பல்
தி.க. சண்முகம் நூலகத்